DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள் www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals 416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00 416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1524 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 20, 2025

## வெகு விமரிசையாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழா – 2025
### ஏழு சாதனையாளர்களுக்கு. அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மேடையில் சூழ்ந்து நிற்க அளிக்கப்பெற்ற உயர் கௌரவம்

கனடா உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பெற்று 10வது வெற்றிகரமான ஆண்டில் (1996) ஆரம்பிக்கப்பெற்ற நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவின் 19வது ஆண்டாக இவ்வாண்டின் விழா கடந்த 14ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் சிறப்பாக நடைபெற்றது.





கனடாவில் பல வர்த்தக முயற்சிகளில் ஈடுபாடு கொண்டு வெற்றிகரமாக இயங்கிவரும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவிலும் அரசியல் மற்றும் சமூகத்தலைவர்களின் ஆசிகளோடும் மேற்படி விழா சிறப்பாக அரங்கேறியது.

இவ்வருடம் ஏழு சாதனையாளர்களுக்கு. அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மேடையில் சூழ்ந்து நிற்க அளிக்கப்பெற்ற உயர் கௌரவத்தை கண்டு களித்த பார்வையாளர்கள் கரகோசம் செய்து தங்கள் பாராட்டுக்களையும் ஒப்புதல்களையும் அங்கீகாரத்தையும் வழங்கினார். (தொடர்ச்சி 16ம் பக்கம்)

## Muraly Srinarayanathas of Computek College becomes one of Ontario's 26 Best Entrepreneurs of 2025
### கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் சிறந்த தொழிலதிபர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள Computek College, திரு முரளி ஸ்ரீநாராயணதாஸ்



130 க்கும் மேற்பட்ட ஒன்றாரியோ மாகாணத்தின் தொழிலதிபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற 26 வெற்றியாளர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் முகமாக அண்மையில் நடத்தப்பெற்ற் தெரிவுத் திட்டத்தின் படி 2025ம் , ஆண்டின் **Entrepreneurs of the Year** கனடா நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளவர்களில் தமிழ்ச் சமூகத்தில் நன்கு அறியப் பெற்றவரான **Computek College**, திரு முரளி நாராயணதாஸ் அவர்களும் தெரிவு செய்யப்பெற்றுள்ளார் என்பதை கனடா உதயன் ஆசிரிய பீடம் பெருமையுடன் அறிவிக்கிறது. (தொடர்ச்சி 13ம் பக்கம்)

Vacancies Motel & Restaurant
நயாகரா நகரப் பகுதியில் உள்ள Motel & Restaurant ஒன்றில் சமையறை உதவியாளர் மற்றும் சுத்திகரிப்பு வேலைக்காரர் ஆகியோர் உடனடியாகத் தேவை. கணவன் -மனைவி தம்பதியாக இருந்தால் நன்று.சம்பளம் பேசித்தீர்க்கலாம். தொடர்புகளுக்கு
416 560 6025

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கிகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


Happy Seniors Month! முதியோர் மாத வாழ்த்துகள்!
June is Seniors Month in Ontario
This year's theme: Fit, Active, Healthy Seniors
I'm thrilled to invite you to join my 1st annual
SCARBOROUGH SENIORS FAIR
ஸ்காபரோ முதியோருக்கான கண்காட்சி
சுறுசுறுப்பான வாழ்க்கை, ஆரோக்கியமான முதுமை
Active Living, Aging Well
FREE Admission
TUESDAY, JUNE 24, 2025 I 11:30AM-3:30PM
Chinese Cultural Centre of Greater Toronto
Multi-Purpose Hall - 5183 Sheppard Ave E, Scarborough
REGISTER NOW
முன்பதிவுகளுக்கு
raymondcho.ca/events
MORE INFORMATION
416-297-5040
raymond.choco@pc.ola.org
RAYMOND CHO
MPP - SCARBOROUGH NORTH
Working For You
Ontario
COMMUNITY OFFICE
4559-B Sheppard Ave E, Scarborough, ON M1S 1V3
416-297-5040 raymond.choco@pc.ola.org
We speak Tamil
தமிழிலும் சேவை
raymondcho.ca


19th Uthayan International Awards Festival
19ஆவது உதயன் சர்வதேச விருது விழா
Congratulations
Sending my heartfelt congratulations and best wishes to the recipients of this distinguished award
விருது பெறும் சாதனையாளர்களுக்கு
எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்
RAYMOND CHO
MPP - SCARBOROUGH NORTH
Working For You
Ontario
4559-B Sheppard Ave E, Scarborough, ON M1S 1V3
416-297-5040 raymond.choco@pc.ola.org
We speak Tamil
தமிழிலும் சேவை
raymondcho.ca

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடிய தமிழ் அச்சு ஊடகங்களைக் காப்பாற்றி வேண்டிய பொறுப்பு யாருடையது?

உலகில் இலத்திரனியல் ஊடகங்களுக்கு முன்னரேயே தோன்றியவை பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளான அச்ச ஊடகங்கள் என்பதை அறியாதவர்கள் சிலரே. அதுவும் வாசிப்பு பழக்கம் மற்றும் உலக அரசியல் செய்திகளில் நாட்டம் கொண்டவர்களுக்கு அச்சு ஊடகங்கள் மீது உள்ள நேசம் சொல்லில் அடங்காதவை.

தமிழ்ப் பத்திரிகைகள எடுத்துக் கொண்டால் இலங்கை, இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பத்திரிகை வாசிப்பதில் உயர் கல்வி கற்றவர்களை விட தொழிலாளர்களும் விவசாயிகளும், மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் உள்ளார்கள் என்பதை தரவுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். எனினும் கல்வியறிவில் உயர்ந்தவர்களும் தனவந்தர்களும் வாசிப்பு பழக்கம் அற்றவர்கள் என்பதை அழுத்திச் சொல்லுவது எமது நோக்கமும் அல்ல.

சாதாரணமானவர்கள் வாசிப்பு பழக்கத்தை தினந்தோறும் கடைப்பிடிக்கின்றனர் என்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து நாம் எடுத்து வருகின்றோம். “திருநெல்வேலி சந்தை“யை பற்றி கேள்விப்படாதவர்கள் வட இலங்கை யாருமே இருக்கமாட்டார்கள். அந்த சந்தை நல்லூர் பிரதேசச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் தினமும் பத்திரிகைகளை வாசிக்கும் கொண்டவர் அதி-காலையிலேயே சந்தைக்கு செல்லும் தனது சுத்திகரிப்பு பணியை சீராகச் செய்த பின்னர் தனது உணவருந்தும் வேளையில் அங்குள்ள கடைகளிலிருந்து தமிழ்ப் பத்திரிகைகளை ஒவ்வொன்றாக எடுத்து வாசித்துவிட்டு அப்படியே திரும்பவும் அந்த தட்டுக்களில் வைத்துவிடுவார்களாம். கடைக்காரர்கள் கூட அவரது வாசிப்புக்கு தடையாக இருக்க மாட்டார்களாம். தேநீர்க் கடைக்காரர்கள் அவருக்கு இலவசமாக தேநீரும் சிற்றூண்டிகளும் வழங்குவார்களாம்.

இவ்வாறு தனது பணிகளையும் பத்திரிகை வாசிப்பையும் நிறைவு செய்த பின்னர் அவர் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்திற்குச் சென்று ஓரமாக ஒரு இடத்தில் நிற்பாராம். அங்கு பணியாற்றும் கற்றவர்களான உத்தியோகத்தர்கள் அவரிடம் கேட்பார்களாம். “இன்று என்ன செய்தி? சொல்லப்பா! என்று.

அவரும் தான் வாசித்த உலக மற்றும் உள்ளூர்ச் செய்திகளையும்
அரசியல் செய்திகளையும் விபரங்களுடன் எடுத்துச் சொல்வாராம். இந்த விடயம் அங்கு வாரத்தில் ஐந்து நாட்களும் நடைபெறும் ஒன்றாகும். வாசிப்பு பழக்கம் கொண்ட அந்த தொழிலாளிக்காக காத்திருந்த கற்றவர்கள் இருந்த காலம் இன்றிலிருந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர். இப்போது எப்படி இருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். அலுவலகத்தில் பணி செய்யும் உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை சரியாகச் செய்யாமல்
தொலைபேசியைத் தட்டிக் கொண்டிருப்பார்கள்.

இப்போது இவ்வார “கதிரோட்டத்தின்“ தலைப்பிற்கு வருவோம். கனடாவில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பத்துக்குக் குறையாத பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றில் வாராந்த மற்றும் மாதாந்த பத்திரிகைகள் அடங்குவன. ஆனால் காலப்போக்கில் தற்போது வாராந்தம் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகள் இரண்டாக “சுருங்கிக்“ கொண்டன. இந்த “சுருக்கம்“ என்பது எண்ணிக்கையில் மாத்திரமல்ல பத்திரிகைகளின் பக்கங்களிலும் தங்கியிருக்கின்றது.


எனினும் எமது “உதயன்“ மற்றும் “உலகத் தமிழர்“ ஆகியவற்றின் வாராந்த வெளியீடுகள் தவறாமல் வெளிவந்தாலும் ஒவ்வொரு வாரமும் அவை “சுகமான பிரசவமாக“ இல்லை என்பதை இரண்டினதும் வெளியீட்டாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் நன்கு உணர்ந்து சவால்களுடன் தங்கள் ஊடகப் பணிகளை தொடர்ந்த வருகின்றார்கள்.

சவால்களுக்கு மத்தியில் எமது சமூகத்தின் வர்த்தகர்கள் சிலரும் மத்திய மற்றும் மாகாண அரசில் உள்ள உறுப்பினர்கள் சிலரும் அச்சு ஊடகங்களை காப்பாற்றும் வகையில் விளம்பரங்களை அவ்வப்போது தந்த வண்ணம் உள்ளார்கள்.

கனடாவில் வெளிவரும் நூற்றுக்கணக்கான பல்லினப் பத்திரிகைகளும் மத்திய அரசின் சிறிய உதவிகள் வருடத்திற்கு ஒரு தடவை வழங்கப்பெறுகின்றன. அதற்கு மேலாக பல் மொழிப் பத்திரிகைகளின் அவசியமும் அவற்றின் தேவையும் பற்றி பல வருடங்களாக கனடாவின் சில மாகாண முதல்வர்களும் பிரதமர்களும் பல்லினப் பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்த ஆரோக்கியமான கருத்துக்களையும் பத்திகைகளை இன்னும் நேசிக்கும் இதயங்களுக்காக இங்கு பதிவு செய்கின்றோம்.

அந்த அரசியல் தலைவர்கள் தெரிவித்த அல்லது உணர்ந்து பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இவைதான். “ஒரு இனம் சார்ந்த பத்திரிகை ஒன்று குறிப்பிட்ட அந்த இனத்தின் அல்லது மொழியின் அடையாளமாகவே திகழ்கின்றது“ என்பதை அவர்கள் பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றனர். அதன் காரணமாகவே அச்சு ஊடகங்களுக்கு தங்கள் ஆகக்குறைந்த ஆதரவை அவர்கள் வழங்கி வருகின்றார்கள். எனவே நாம் மேற்கூறிய கருத்துக்களின் முடிவுரையாக எமது சமூகத்தின் ஆதரவும் நேசிப்பும் எமது அச்சு ஊடகங்களுக்கு தொடர்ந்தும் இருக்க வேண்டிய ஒன்றே என்ற நம்பிக்கையுடன் நாம் காத்திருக்கின்றோம் என்பதை வெளிப்படையாகவே நாம் பதிவு செய்கின்றோம்.!

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728



Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



Not to Worry!

Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

Kantharmadam Makkal Ontrium Summer Picnic/ Get-Together.
It is being held on Saturday, June 21, 2025 at Thomson Park, Picnic area 2, starting at 10am to 8pm. Barbecue, food, snacks and drinks will be served. All are welcome!

Room for Rent

McLevin/Sewells வீட்டில் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உள்ளது. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
John 416-664-666

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மீன்பிடி தடைக்காலம் நிறைவின் பின்னர் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் சென்று மீன் பிடிக்க வேண்டாம்

## மல்லிபட்டினத்தில் ஆறு மாவட்ட மீனவர்கள் இணைந்து ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு



(13-06-2025)

தமிழக அரசால் அமலபடுத்தப்பட்ட 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நாளை நள்ளிரவுடன் நிறைவடையவுள்ள நிலையில் ராமநாதபுரம் மாவட்ட விசைப்படகு மீனவர்கள் வரும் திங்கட்கிழமை (16) அதிகாலை மீன்பிடிக்க கடலுக்கு செல்ல போவதாக முடிவு செய்துள்ளனர்.

மேலும் கடல் சீற்றத்துடன் இருப்பதால் மீனவர்கள் உரிய பாதுகாப்பு உபகரணங்களுடன் மீன் பிடிக்க செல்ல வேண்டும் எனவும், எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் சென்று இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் படி மீன் பிடிக்க வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசால் அமல்படுத்தப்பட்ட 61 நாள் மீன்பிடி தடைக்காலம் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி தொடங்கி ஜுன் 14ஆம் தேதி வரும் சனிக்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைய உள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், ராமேஸ்வரம், சோளியாக்குடி, புதுக்கோட்டை மாவட்டம் மல்லிபட்டிணம், ஜெகதாபட்டினம், கோட்டைப்பட்டினம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை மீன் பிடித்து விட்டு கரை திரும்பும் நாள் என்பதால் தடை காலம் முடிந்து எப்போது கடலுக்கு மீன் பிடிக்க செல்வது என்பது குறித்து நேற்று வியாழக்கிழமை (12) மாலை 6 மணி அளவில் மல்லிபட்டினத்தில் ஆறு மாவட்ட மீனவர்கள் இணைந்து ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தி திங்கட்கிழமை அதிகாலை மீனவர்கள் மீன்பிடிக்க செல்வது என முடிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் மல்லிப்பட்டினத்தில் நடந்த ஆறு மாவட்ட மீனவர்கள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து இன்று ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே உள்ள மீன்பிடி அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகத்தில் ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கம் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் என்று நடத்தினர்.

அந்த கூட்டத்தில் வரும் 16 ஆம் தேதி திங்கட்கிழமை அதிகாலை மீன்பிடி மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டும், தடையை மீறி மீன்பிடி அனுமதி சீட்டு பெறாமல் மீன்பிடிக்க சொல்லும் மீன்பிடி படகுகள் மீது மீன்வளத்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும், எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் படி மீன் பிடிக்க வேண்டாம், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் வழக்கத்திற்கு மாறாக கடல் சீற்றத்துடன் இருப்பதால் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் உரிய பாதுகாப்பு உபகரணங்களுடன் மீன்பிடிக்க செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நல்லூர் பிரதேச சபையில் ஈ.பி.டி.பி வெளிநடப்பு — NPP உள்ளிட்ட கட்சிகளின் ஏக விருப்புடன் ஆட்சியை தனதாக்கியது மான்!



NPP உள்ளிட்ட கட்சிகளின் ஏக விருப்புடன் தமிழ் மக்கள் கூட்டணியின் பத்மநாதன் மயூரன் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் 13ம் திகதி அன்றையதினம் நல்லூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 7 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், சங்கு 3 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இதன்படி தமிழ் மக்கள் கூட்டணியின் தவிசாளர் வேட்பாளராக மயூரன் சபையில் முன்மொழியப்பட்டார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தன்னுடைய நிலைபாட்டை சபையில் தெரிவித்து குறித்த தவிசாளர் தெரிவை புறக்கணித்து வெளியேறியிருந்தது.

இன்னிலையில் வேறு போட்டியாளர் இன்மையால் தவிசாளராக தேர்ந்தெடுக்கபட்டார்.

இதன்படி சபையின் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகளின் 19 உதுப்பினர்களினதும் ஏக விருப்பின் பெயரில் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்னிலையில் உப தவிசாளராக இராஜமனோகரன் ஜெயகரனும் சபையில் பிரசன்னமாக இருந்த குறித்த கட்சிகளின் ஏக விருப்புடன் தெரிவகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இரத்ததான முகாம்!



உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியன இணைந்து இரத்ததான முகாம் ஒன்றினை முன்னெடுத்தன.

இந்த முகாம் 13ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை, காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் ஆரம்பமாகியது.

இதில் பங்கேற்கும் ஒவ்வொரு இரத்ததானக் கொடையாளருக்கும் இலவசமாக மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. மேலும் இந்த முகாம், சமூகத்தில் இரத்ததானத்தின் முக்கியத்துவத்தையும், சூழலியலின் பாதுகாப்பையும் ஒருசேர வலியுறுத்தும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் - இந்திய துணைத் தூதர் சாய் முரளி, யாழ். இந்திய துணை தூதரக அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.










# ஆனையிறவு உப்பு என பெயர் மாற்றம்!

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பிற்கு ஆனையிறவு உப்பு என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பிற்கு அண்மையில் ரஜ உப்பு என பெயர் சூட்டியமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் மீண்டும் அந்த உப்பிற்கு ஆனையிறவு உப்பு என பெயர் சூட்டப்பட்டது. இந்நிலையில் குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக விநியோகம் செய்யப்படும் என அறியமுடிகிறது.

# யாழ்ப்பாணத்தில் கடுமையான காற்று காரணமாக 12பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்





கடுமையான காற்று காரணம் யாழில் 12பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்று சேதமடைந்துள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



# தமிழீழம் கேட்ட வட்டுக்கோட்டையை திட்டமிட்டு அழிக்கின்றீர்களா – கலாநிதி சிதம்பரமோகன் ஆதங்கம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

வட்டுக்கோட்டை என்பது தொகுதியா? அல்லது பிரதேசமா? வட்டுக்கோட்டையை திட்டமிட்டு நீங்கள் அழிக்கின்றீர்களோ தெரியவில்லை என கலாநிதி சிதம்பரமோகன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது 13ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றையதினம் நடைபெற்றது. அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த சங்கானையை நகரசபையாக தரம் உயர்த்துங்கள், வட்டுக்கோட்டையை பிரதேச சபையாக மாற்றுங்கள்.

தமிழீழம் கேட்ட வட்டுக்கோட்டையில், தந்தை செல்வா காலம் தொடக்கம் இன்றுவரை பொது மலசலம்கூட இல்லை. ஒரு பொலிஸ் நிலையம் மட்டும் உள்ளது. நீங்கள் திட்டமிட்டு வட்டுக்கோட்டையை அழிக்கின்றீர்களோ தெரியவில்லை என ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் மாநகர சபையால் எரியூட்டப்படும் கழிவுகள் – சுவாசம் தொடர்பாக பாதிக்கப்படும் மக்கள்!



கல்லூண்டாயில் உள்ள யாழ்ப்பாண. மாநகர சபையின் கழிவு சேமிக்கும் பகுதியில் இரவு மற்றும் பகல் வேளைகளில் குப்பைகள் எரியூட்டப்படுகின்றதால் மக்கள் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக இலங்கை தமிழரசு கட்சியின் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் திரு.ஆதவன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது 13ம் திகதி அன்றையதினம் நடைபெற்றது. இந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பகுதியானது வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக எல்லைக்குள் அமைந்திருந்தாலும் சங்கானை, அராலி போன்ற பகுதிகளும் பாதிக்கப்படுகின்றன. அந்த சூழலை அண்டியுள்ள மக்களின் சுவாசத்துக்கு அது பிரச்சினையாக உள்ளது என்றார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டத்தை தலைமை தாங்கும் தலைவருமான ஸ்ரீ பவானந்தராஜா பதிலளிக்கையில், மாநகர சபையினர்தான் இந்த வேலைகளை செய்கின்றனர். கழிவகற்றல் என்பது ஒரு பாரிய பிரச்சினையாகத்தான் உள்ளது. இதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிப்போம் என்றார்.

# சில கட்சிகள் கோட்பாட்டுக்கு முரணாக செயற்படுகின்றன என்கின்றார் சுமந்திரன்!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் தெரிவு நிறைவடைந்த பின்னர், இலங்கை தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் ஆ.சுமந்திரன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் தெரிவு 12ம் திகதி அன்றையதினம் நிறைவடைந்துள்ளது. இலங்கை தமிழரசு கட்சி முன்னிறுத்திய வேட்பாளர்களான திருமதி. ம.மதிவதனி, திரு. இமானுவேல் தயாளன் ஆகிய இருவரும் முறையே முதல்வர், பிரதி முதல்வராக, பகிரங்க வாக்கெடுப்பின்மூலம் 19:16 என்ற வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். யாழ். மாநகர சபையில் கூடுதலான ஆசனங்களை இலங்கை தமிழரசு கட்சி பெற்றமைக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

எந்தெந்த சபைகளிலே எவரெவர் அதிகூடிய ஆசனங்களை பெற்றுள்ளார்களோ அவர்கள் அந்த சபை நிர்வாகத்தை அமைப்பதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே கூறியுள்ளோம். அந்த கோட்பாட்டுக்கு அமைவாக அன்றைய தெரிவு இடம்பெற்றிருக்கிறது.



இந்த கோட்பாட்டையே வேறு சில கட்சிகளும் வலியுறுத்தி தாங்களும் சொல்லியதுடன் எங்களுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தாங்கள் அறிவித்த கோட்பாட்டுக்கு முரணாக இன்றைக்கு அந்த கட்சிகள் செயற்படுகின்றன. இது துரதிர்ஷ்டவசமான சம்பவம் என்றார்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் சுற்றுச்சூழல் தினத்திற்கான விழிப்புணர்வு நிகழ்வும் வீதி நாடகமும்!



யாழ். வடமராட்சி இந்து கல்லூரியின் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பவனி நிகழ்வும், வீதி நாடகமும் 13ம் திகதி அன்றயதினம் காலை 8:30 மணியளவில் "பிளாஸ்டிக் மாசுப்பாட்டை முடிவுறுத்துவோம்" எனும் தலைப்பில் பாடசாலை முன்றலில் ஆரம்பமானது.

இந் நிகழ்வானது பாடசாலை முன்றலில் ஆரம்பமாகி பின் பருத்தித்துறை ஓராம் கட்டை சந்தியிலிருந்து பிரதான வீதி ஊடாக விழிப்புணர்வு பவனி பஸ் நிலையம் வரை சென்று அங்கிருந்து எஅ வீதி ஊடாக மீண்டும் 10:30 மணியளவில் பாடசாலை முன்றலில் நிறைவு பெற்றது.

இவ் பவனி நிகழ்வில் பாடசாலை மாணவிகள் பிளாஸ்டிக் பாவனையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் இடர்பாடுகள் தீர்வு என்பன தொடர்பான பதாகைகள் தாங்கி சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவிகள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் மற்றும் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையில் பொலிஸ் அணியினரும் பவனியில் பங்குகொண்டு பவனிக்கு அவர்களால் பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் புகையிரத தண்டவாளத்தின் மீது அமர்ந்திருந்த இளைஞன் புகையிரதம் மோதி உயிரிழப்பு!

16ம் திகதி திங்கட்கிழமையன்று மாலை இளைஞர் ஒருவர் ரயில் தண்டவாளத்தின் மீது அமர்ந்திருந்த நிலையில் ரயில் மோதி உயிரிழந்துள்ளார். இதன்போது யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியைச் சேர்ந்த தலையசிங்கம் சுதாகரன் (வயது 20) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் அன்று மாலை புங்கன்குளம் பகுதியில் உள்ள ரயில் நிலையத்துக்கு அருகாமையில் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்திருந்துள்ளார்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த ரயில் இளைஞனை மோதித் தள்ளியது. இந்நிலையில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் – நெடுந்தீவில் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்துள்ளார்

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பகுதியில் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். நெடுந்தீவு 3ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த இராமநாதன் முத்துலிங்கம் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குடும்பஸ்தர் கடந்த 15ஆம் திகதி இரவு 10 மணியளவில் இரத்த வாந்தி எடுத்துள்ளார். பின்னர் 16ஆம் திகதி நெடுந்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, 17ஆம் திகதி அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி 17ம் திகதி அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் தியாகத்தாலேயே மக்களின் மீள்குடியமர்வு சாத்தியமாகிறது என்கிறார் ஆளுநர் வேதநாயகன்!



மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் தியாகத்தாலேயே பல இடங்களில் மக்களின் மீள்குடியமர்வு வெற்றிகரமாக சாத்தியமாகியிருக்கின்றது. அவர்களின் தியாகத்துக்கு மதிப்பளித்துப் பாராட்டுகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

முகமாலை வடக்கு பிரதேச முன்னரங்கப் பகுதிகளில் ஹலோ ட்ரஸ் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியின் நிறைவும், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட பணியாளர்களின் கௌரவிப்பும் முகமாலையில் 18ம் திகதி அன்று புதன்கிழமை (18.06.2025) நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட






ஆளுநர் தனது உரையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலராக 2003ஆம் ஆண்டு இணைந்துகொண்டதிலிருந்து மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுடன் இணைந்து நான் பணியாற்றியிருக்கின்றேன். அவர்களுடன் இணைந்து பணியாற்றியதை பெருமையாகக்கருதுகின்றேன். தங்கள் உயிரை துச்சமாக மதித்து இந்தப் பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

முகமாலை பிரதேசம் கடந்த காலத்தில் போரின் எச்சங்களை வைத்திருந்தது. மக்களின் மீள்குடியமர்வுக்கு அது தடையை ஏற்படுத்தியது. இன்று அது மக்களுக்கு பயனுள்ள ஒன்றாக வெற்றிகரமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

ஹலோ ட்ரஸ் நிறுவனம் மகத்தான சவால்களை எதிர்கொண்டு மேற்கொண்ட அவர்களின் கடினமான முயற்சிகள், நமது மக்களின் பாதுகாப்பான மீள்குடியேற்றத்துக்கும் அவர்களின் வாழ்வாதாரங்களின் மறுமலர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன.

இந்த நிலத்தை தரிசாக வைத்திருக்கும் மற்றும் அதன் மக்களை காத்திருக்க வைக்கும் மறைக்கப்பட்ட அச்சுறுத்தல்களை அகற்ற ஹலோ ட்ரஸ், பெரும்பாலும் ஆபத்தான சூழ்நிலைகளில் அயராது உழைத்து வருகிறது. இது வெறும் நிலத்தை சுத்தம் செய்வது பற்றியது மட்டுமல்ல, நம்பிக்கையை கட்டியெழுப்புவது பற்றியது. இது குடும்பங்களுக்கு தங்கள் வீடுகளை மீண்டும் கட்டியெழுப்பவும், தங்கள் வயல்களை மீண்டும் பயிரிடவும், தங்கள் குழந்தைகளை பயமின்றி விளையாட அனுமதிக்கவும் நம்பிக்கையை அளிப்பதாகும்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றுபவர்களின் சாதனைகளுக்கு நாங்கள் உங்களை வாழ்த்துகிறோம். இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள், அமைப்புக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எதிர்காலத்தில், இலங்கை முழுவதும் கண்ணிவெடிகளின் அச்சுறுத்தலில் இருந்து விடுபடும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். உங்கள் சேவை நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகும், அதற்காக நாங்கள் என்றென்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்கப்பட்டு, ஹலோ ட்ரஸ் நிறுவனத்தால் முகமாலையில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டம் தொடர்பான விளக்கமளிக்கப்பட்டது. இதன் பின்னர் பணியாளர்கள் ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த.ஜெயசீலன், கனேடிய துணைத்தூதுவர் உள்ளிட்ட பலர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# சென்னையில் நடைபெற்ற இலங்கை கலைஞர்களின் "தீப்பந்தம்" பட விழா!

இலங்கை செய்திகள் Sri Lanka News

இலங்கை கலைஞர்களின் படைப்பான "தீப்பந்தம்" முழுநீள திரைப்பட பட விழா சென்னையில் நடைபெற்றது.

இதன்போது தேசிய தலைவர் பிரபாகரனின் பாராட்டு பெற்ற தென்னிந்திய பிரபல இயக்குனரும், தமிழ் பேரரசு கட்சியின் தலைவருமாகிய திரு. வ.கௌதமனின் உரை அனைவரையும் மனமுருக வைத்துள்ளது.

அவர் கூறிய விடயங்கள்:

1. வரும் காலங்களில்
உலக சினிமாவை எமது ஈழப் படைப்புக்களே ஆளும்.

2.எங்களை அழித்த
உலகின் அதிகார மையங்களின் ஆன்மாவை தகர்த்து அவர்களை நிரந்தரமாக தலை(குனிய)வணங்க வைக்கும்.

படத்தில் திரைப்படத்தின் இயக்குனர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவராஜ் அவர்கள் இயக்குனர் கௌதமன் அவர்களைக் கௌரவிப்பதைக் காணலாம்.







# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இராணுவத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இரத்ததான முகாம்


(14-06-2025)

தாய் நாட்டின் சமாதானம் கருதி உயிர் நீத்த இலங்கையர்களை நினைவு கூர்ந்தும், உலக இரத்த தான தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் 543வது படைப்பிரிவு ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் 14ம் திகதி அன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஆசாத் எம். கணீபா, மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் உதவி பணிப்பாளர் வைத்தியர் கில் றோய் பீரிஸ், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட், தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சமந்த விஜயரத்தின, உள்ளடங்களாக ராணுவ அதிகாரிகள், வைத்தியர்கள், ராணுவவத்தினர், வைத்தியசாலை பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கலந்து கொண்ட தள்ளாடி, கள்ளியடி, மாதோட்டம், பேசாலை ஆகிய இராணுவ முகாம்களை சேர்ந்த ராணுவ அதிகாரிகள் மற்றும் ராணுவ சிப்பாய்கள் இரத்த தானம் செய்து வைத்தனர்.






# Thana Insurance Inc

**T20 INSURANCE**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

**PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

**NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

**20 YEARS TERM - NON MEDICAL INSURANCE**

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோவில் உயர் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல்





நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோவில் உயர் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் தலைமையில் 17ம் திகதி அன்றையதினம் காலை 10.00 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடல் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் அவர்கள், நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோவில் உயர் திருவிழா எதிர்வரும் 2025.06.26 ஆம் திகதி தொடக்கம் 2025.07.11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும், அனைத்து பக்தர்களும் சிறப்பான முறையில் எந்தவித இடையூறும் இல்லாமல் ஸ்ரீ நாக பூசணி அம்பாளை தரிசிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டடுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், கடந்த வருட திருவிழா ஏற்பாடுகளில் கற்றுக் கொண்ட பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு இம் முறையும் உயர் திருவிழாவினை மேலும் சிறப்பாக நடைபெற அனைவரின் ஒத்துழைப்பினையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இக் கலந்துரையாடலில் பின்வரும் ஏற்பாடுகளை மேற்கொள்து எனத் தீர்மானிக்கப்பட்டது.

1. நயினாதீவில் மூழ்கிய கடற்பாதையினால் ஏற்பட்டுள்ள கடற் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள இடையூறை தவிர்ப்பதற்காக ஒரு பகுதியை கடற்படையின் ஒத்துழைப்புடன் அகற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2. குடிநீர் தேவைப்பாடுகள் - ஆலயத்திற்குவரும் பக்தர்கள், அமுதசுரபி மண்டபம் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கான தேவையான அளவு குடிநீர்களை சீராக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சீராக வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. பாதுகாப்பிற்கு தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்கள் - அதாவது சப்பறத் திருவிழா வரை 50 பொலிஸ் உத்தியோகத்தர்களையும், சப்பறம், தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவன உற்சவங்கள் வரை மேலும் 50 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சேவையில் ஈடுபடுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

4. பக்த்தர்கள் அணிந்துவரும் நகைகளுக்கு அவர்களே பொறுப்பு என அறக்காவலர் சபையால் முன்கூட்டியே அறிவித்தல் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

5. ஆலயத்திற்கு அருகிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதியினை நிரந்திமாக புனரமைப்பதற்கு முன்பாக தற்காலிகமாக சீர் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

6. சாரணர்களின் சேவைகளைபெற்றுக்கொள்ளவது தொடர்பாகவும் முதல் தடவையாக தீவகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சாரணர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை இலங்கை போக்குவரத்துச் சபையூடாக மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

7. திருவிழாக் காலங்களில் வழமைபோல் யாழ் பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து குறிகட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்து சேவை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் விசேட திருவிழாவான சப்பறம், தேர் மற்றும் தீர்த்த உற்சவங்களில் காலை 4.30 மணியிலிருந்து ஆரம்பமாகும் எனவும் ஒவ்வொரு அரை மணித்தியாலங்களுக்கும் சேவை இடம் பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

8. குறிகட்டுவானில் இருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 80 ரூபாய் எனவும் தீர்மானிக்கப்பட்டது.



அத்தோடு கடற்போக்குவரத்து (படகு) நேரத்திற்கமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கை போக்குவரத்து பேருந்து சேவை நடைபெறவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

9. திருவிழா காலங்களில் நயினாதீவு கிராமங்களில் திருடர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடமாடும் சேவையினை ஈடுபடுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

10. யாசகம் பெறுவோர் மற்றும் சிறுவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுத்துவதை கண்காணிப்பதற்கு ஒரு நாளைக்கு ஒரு பிரதேச செயலகம் என்ற அடிப்படையில் அங்கு கடமையாற்றும் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர் உள்ளடங்கியவகையில் உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு கடமையில் ஈடுபடுத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

11. குறிகட்டுவான் துறைமுகத்தின் உள்நுழைவு வரை வாகனங்கள் தரித்து நிற்பதனை தடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

12. ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கடைகளை அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் வேறு பொருத்தமான இடத்தில் மாற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

13. நயினாதீவுக்கு 24.06.2025 ஆம் திகதி முதல் 12.07.2025 ஆம் திகதி வரை கட்டடப்பொருட்களை குறிப்பாக கல் மற்றும் மணல் என்பவற்றை எடுத்துச் செல்வது முற்றாக தடைசெய்வது எனவும், தொடர்ந்து எதிர்காலத்தில் கட்டடப் பொருட்களை நயினாதீவு வங்களாவடி துறைமுகத்தின் ஊடாக கொண்டு செல்வதற்கு ஏதுவாக பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், வீதி அபிவிருத்தி திணைக்கள ம், வீதி அபிவிருத்தி அதிகாரசபைய, படகுச் சங்கம், ஆலய அறக்காவலர் சபையினர் மற்றும் பொது அமைப்புகள் ஆய்வு செய்து இறுதி தீர்மானம் எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

14. நயினாதீவில் மதுபான விற்பனையினை மதுவரித்திணைக்களம் நடமாடும் சேவையூடாக கண்காணிப்பது எனவும், விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கைகளை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

15. பொலித்தீன் பாவனையினை கட்டுப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

16. அமுதசுரபி அன்னதான சபையினால் மதிய உணவு இரவு உணவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

17. மேலும், வைத்திய சேவை, சுகாதாரம், மின்சாரத் தேவை, அம்புலன்ஸ் சேவை, இலங்கை செஞ்சிலுவை மற்றும் சென் ஜோன்ஸ் படையினர் சேவை உள்ளிட்ட விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. க. ஸ்ரீமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி. உ.தர்சினி, நாகபூஷணி அம்மன் ஆலயம் அறங்காவலர் சபைத் தலைவர் திரு. பரமலிங்கம், வேலணை பிரதேச செயலாளர் திரு. சிவகரன், சுகாதார வைத்திய அதிகாரிகள், இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள், கடற்படை அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலாளர், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

# யாழ்ப்பாணத்தில் உணவு அருந்திய பின்னர் மயங்கிய இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் உணவு அருந்திய பின்னர் இருந்த இளைஞர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை உயிரிழந்துள்ளார். இதன்போது பழைய புகையிரத நிலைய வீதி, கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் எனோ அசாந் (வயது 20) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் அன்றையதினம் தனது வீட்டில் கேக் மற்றும் தேநீர் என்பன உட்கொண்டு சிறிது நேரத்தில் மயக்கமுற்றுளார். பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அங்கு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணம் – வலிகாமம் மேற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக ஜெயந்தன் தெரிவு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலமையில் இடம் பெற்ற நிகழ்வில் தவிசாளர் தெரிவுக்காக இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர் ச.ஜெயந்தன் மற்றும் தமிழ் தேசிய பேரவையின் உறுப்பினர் சுப்பிரமணியம் தர்மலிங்கம் நந்தகுமார் ஆகியோர் போட்டியிட்டனர்.

இதில் பகிரங்க வாக்கெடுப்பினை 18பேரும், 8 பேர் இரகசிய வாக்கெடுப்பினையும் கோரினர். அந்தவகையில் பெரும்பான்மை அடிப்படையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது க.ஜெயந்தனுக்கு 15 வாக்குகளும், சுப்பிரமணியம் தர்மலிங்கம் நந்தகுமார் 7 பெற்றனர். அந்தவகையில் ச.ஜெயந்தன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

ச.ஜெயந்தனுக்கு ஆதரவாக இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர்கள் 10 பேரும், ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இரண்டுபேரும், ஐ.ம.சக்தியின் ஒரு உறுப்பினரும், சுயேட்சை குழுவின் ஒரு உறுப்பினரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் வாக்களித்தனர். அந்தவகையில் ச.ஜெயந்தன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்ததாக உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது வே.சச்சிதானந்தம், க.இலங்கேஷ்வரன் ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. அந்தவகையில் கந்தையா இலங்கேஸ்வரனுக்கு 14 வாக்குகளும், வே.சச்சிதானந்தனுக்கு 8 வாக்குகளும் கிடைத்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். அந்தவகையில் கந்தையா இலங்கேஸ்வரன் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாற்றுத்திறனாளர்களின் அடிப்படை வசதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் — கருவி நிறுவனம் வலியுறுத்து!




ஏனைய பிரஜைகள் போன்று மாற்றுத்திறனாளர்களின் குறிப்பாக கண்பார்வை இல்லாத மாற்று வலுவுள்ளிருக்கான அடிப்படை வசதிகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அருவி நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் 14ம் திகதி அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு வலியுறுத்திய குறித்த அமைப்பின் நிர்வாகிகள் மேலும் கூறுகையில், மாற்றுத் திறனாளியும் இந்நாட்டின் பிரஜைகளே. அவர்களும் சகலதும் பெற்று உறுதியாக வாழ வேண்டும். ஆனால் எமது நட்டில் அத்தகைய ஒரு நிலையான பொறிமுறை இல்லாதுள்ளது.

குறிப்பாக பாடசாலைகள், தொழில் இடங்கள், பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட இடங்களில் அல்லது சேவை பெறும் இடங்களில் நாளாந்தம் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்க நேரிடுகின்றது.

இதில் பொதுப் போக்குவரத்திலேயே அதிகளவு இடர்பாடுகள் ஏற்படுகின்றது. இதை குறித்த சேவை வழங்குநர்களே எமது நிலைமையை உணர்ந்து, உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து தீர்வுகளை தரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

குறிபாக சமூக சேவைகள் அதிகாதிகள் இதில் அதிக அக்கறை எடுத்து பொறிமுறையை உருவாக்கி சேவையை நாம் இலகுவாகவும் மனித நேயத்துடனும் பெற்றுக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும் எமது வருமான ஈட்டல் மற்றும் பொருளாதாரத்துக்காக நாம் கருவி நிறுவனத்தின் ஊடாக பல உற்பத்திப் பொருட்களை செய்து சந்தைப்படுத்தி வருகின்றோம்.

அதற்காக எமது மாற்றுத்திறனாளிகள் பலர் வெளிக்கள பணிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆனால் தற்போது எமது இயலமையை பயன்படுத்தி, குறிப்பாக அருவி நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி பலர் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே மோசடிகளை மக்கள் விளிப்புடன் எதிர்கொண்டு எமது வாழ்வியலை வலுப்படுத்துவது அவசியம் என்றும் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் திறந்து வைக்கப்பெற்றது!





யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் 14ம் திகதி அன்றையதினம் காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தின் இணைப்பாளராக திரு. சுந்தரமூர்த்தி கபிலன் அவர்களுக்கான நியமனக் கடிதம் கௌரவ அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கருணநாதன் இளங்குமரன், அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. க.ஸ்ரீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. இ.சுரேந்திரநாதன், பிரதம கணக்காளர் திரு. எஸ் கிருபாகரன், கௌரவ அமைச்சர் அவர்களின் உத்தியோகத்தர் கள் உள்ளிட்டோர் பங்குபற்றினார்கள்.

# மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்குவோம் என அநுரவின் ஆளும் தரப்பு தெரிவிப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்



மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்குவதென்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகரன் மற்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் ஆளுநருமான நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் 13ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை, ஆளுநர், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலர், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர், மாகாண மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர்கள், பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளைப்பெற்றுக் கொண்டவர்கள் ஆகியோர் 14ம் திகதி அன்று சனிக்கிழமை (14.06.2025) நேரில் சென்று பார்வையிட்டனர். அதன் பின்னர் மட்டுவிலில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் அருகில் உள்ள மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ.சந்திரசேகரன், இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்கவேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதற்கமைவாக வியாபாரிகளுடன் கலந்துரையாடலை நடத்துகின்றோம்.

இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள இடங்களைவிட இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைந்துள்ள இடம் சிறப்பானது. வீதியோரத்தில் அமையப் பெற்றிருக்கின்றது. ஏனைய இடங்களிலும் பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்படும்போது அந்தப் பிரதேசங்கள் பிரபல்யமானவையாக இருக்கவில்லை. காலப்போக்கில்தான் அவை பிரபல்யமடைந்தன. அதேபோன்று எதிர்காலத்தில் இந்தப் பொருளாதார மத்திய நிலையமும் மாற்றமடையும் எனக் குறிப்பிட்டார்.



இதன் பின்னர் கடைகளைப் பெற்றுக் கொண்ட வியாபாரிகள் தமது பிரச்சினைகளை முன்வைத்தனர். கடைக்கான முற்பணத்தை வழங்கியபோதும் இதுவரை வியாபார நடவடிக்கை நடைபெறவில்லை என்பதையும், அங்கு எத்தகைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக அந்தப் பகுதியைப் பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டு தரவேண்டும். விவசாயிகளுக்கும் தென்பகுதி வியாபாரிகளும் இதைநோக்கி வருவதற்கு ஏதுவான ஏற்பாடுகளை மேற்கொண்டு தரவேண்டும் என கடைகளைப்பெற்றுக்கொண்ட வியாபாரிகள் சந்திப்பில் சுட்டிக்காட்டினர். அதற்காக தமக்கு சில சலுகைகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுநர், விவசாயிகளுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றும், அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக பொருளாதார மத்திய நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் இந்தப் பொருளாதார மத்திய நிலையத் திட்டம் தயாரிக்கப்படும்போது சில பகுதிகளில் சேகரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டு அங்கிருந்து பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டு வரப்படவேண்டும் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார மத்திய நிலையத்தை செயற்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் என அமைச்சர் இ.சந்திரசேகரன் குறிப்பிட்டார். மேலும் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்துக்குரிய நிர்வாகக் குழுவும் மீளமைக்கப்பட்டது.



# சூட்சுமமான முறையில் பாலை மர தீராந்திகளை எடுத்து வந்த சந்தேகநபர் கைது!

முட்கொம்பன் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பாலை மர தீராந்திகளை கொண்டு சென்ற ஒருவர் பொலிஸாரால் 14ம் திகதி அன்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சூட்சுமமான முறையில் கப் ரக வாகனத்தின் கீழ் தீராந்திகளை மறைத்து கொண்டு சென்றவேளை, சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சங்குப்பிட்டியில் கடமையில் இருந்த பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது விசுவமடுவைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# எரிபொருள் வரிசையும் புதிய உள்ளூராட்சி சபைகளும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பு நீண்ட வரிசைகள். ஒருவரிசையில் மோட்டார் சைக்கிள்கள். இன்னொரு வரிசையில் நான்கு சில்லு வாகனங்கள். சில இடங்களில் கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டருக்கும் அதிகமான வரிசைகள். ஏனென்று கேட்டால், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு வரலாம் என்ற பயம்; ஊகம்.

அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள மிகப்பெரிய மரக்கறிச் சந்தையாகிய திருநெல்வேலி சந்தையில் இஞ்சி வாங்கினேன். 100 கிராம் 300 ரூபாய் என்று சொன்னார் வியாபாரி. ஏன் அவ்வளவு விலை? என்று கேட்டேன். சண்டை தொடங்கிவிட்டதாம் அதனால் இஞ்சி விலை ஏறிவிட்டது என்றார். இஞ்சிக்கும் மேற்கு ஆசியாவில் நடக்கும் சண்டைக்கு என்ன உறவு? என்று கேட்டேன். இஞ்சி தமக்கு ஈரானில் இருந்து வருகிறதா? அல்லது மேற்காசியாவில் இருந்து வருகிறதா? என்று கேட்டேன். "தெரியாது. ஆனால் சண்டை தொடங்கி விட்டதால் விலை ஏறிவிட்டது என்று மொத்த வியாபாரிகள் கூறுகிறார்கள்" என்று சொன்னார்.

இலங்கைக்கு எரிபொருள் தரும் நாடுகளில் ஈரான் உண்டா என்று கேட்டால், எரிபொருள் விற்பனை நிலையத்தின் முதலாளிகளிடம் பதில் இருக்கவில்லை. வரிசையில் நிற்கும் படித்தவர்களிடம் கேட்டால் அவர்களிடமும் பதில் இல்லை. இஞ்சி மேற்காசியாவில் இருந்து வருகிறதா என்று கேட்டால் வியாபாரிகளிடம் பதில் இல்லை. அப்படி என்றால் எதற்காக விலை ஏற்றங்கள்? எதற்காக நீண்ட வரிசைகள்?

கடந்த திங்கட்கிழமை மட்டுமல்ல இதற்கு முன்னரும் மேற்கு ஆசியாவில் போர்ப் பதற்றம் ஏற்படும் போது இவ்வாறு நீண்ட வரிசைகளை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னர் காணக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தவரின் முன்னெச்சரிக்கை உணர்வும் அவர்களுடைய ரத்தத்தில் ஊறிய சேமிப்பு கலாச்சாரமும்தான் அதற்குக் காரணமா? முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஒரு சமூகம் அவ்வாறு முன்னெச்சரிக்கையோடு சில விடயங்களை ஊகித்து, அந்த ஊகங்கள் பிழையாக இருந்தாலும் பரவாயில்லை, தற்காப்பு உணர்வோடு சிந்திப்பது நல்லது. ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால், இவ்வளவு முன்னெச்சரிக்கை உணர்வுடைய ஒரு மக்கள் ஏன் அரசியலில் மட்டும் முன்னெச்சரிக்கை உணர்வின்றி ஏனோ தானோ என்று வாக்களிக்கிறார்கள்?

அல்லது இது வெறுமனே சேமிப்பு கலாச்சாரத்தின் ஒரு பகுதி தானா? அப்படியென்றாலும் கூட திரும்பக் கேள்வி கேட்கலாம். சேமிப்புக் கலாச்சாரம் என்பதே தற்காப்பு உணர்வின் விளைவுதான். எதிர்காலத்தில் வரக்கூடிய தட்டுப்பாடுகளை முன் ஊகித்து பொருட்களை வாங்கி சேமிக்கும் பண்புடைய ஒரு மக்கள் கூட்டம் தனது எதிர்கால அரசியலை குறித்து எவ்வளவு தற்காப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்? தமது அடுத்த சந்ததிக்காக தமிழ் தேசிய அரசியலில் தமிழ் மக்கள் சேமித்து வைத்திருப்பவை எவை? இந்த கேள்விகளுக்கு விடை வேண்டும்.

அனைத்துலக அளவில் நிகழும் ஒரு மோதலை வைத்து முன்னெச்சரிக்கை உணர்வோடு அல்லது ஊகத்தின் அடிப்படையில் பொருட்களைச் சேமிக்க முற்படும் ஒரு சமூகம், தன் உள்நாட்டு அரசியலைப் பொறுத்து அவ்வாறு முன் யோசனை இன்றியும் மந்தத்தனமாகவும் இருப்பதற்கு காரணம் என்ன? எது அவர்களுடைய எதிர்கால சந்ததியினரின் வாழ்வை தீர்மானிக்க கூடியதோ, அந்த விடயத்தில் மட்டும் ஏன் விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார்கள்?

விழிப்புணர்வு கொண்ட மக்களாக இருந்திருந்தால் அரசியலில் வரக்கூடியவற்றை முன்னுணர்ந்து முன்யோசனையோடு தலைவர்களை தெரிவு செய்யும் ஒரு கலாச்சாரத்தை கொண்ட மக்களாக இருந்திருந்தால், உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் மக்கள் யார் யாரைத் தெரிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தொகுத்துப் பார்த்தால் தெரியவரும் தானே?

அண்மையில் யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் உள்ள ஒரு தேவாலயத்தில் நடந்த மக்கள் சந்திப்பின்போது உள்ளூராட்சி சபைகளில் நீங்கள் யார் யாருக்கு வாக்களித்தீர்கள்? உள்ளூர் உணர்வுகளை மதித்து வாக்களித்தீர்களா? அல்லது தமிழ்த் தேசிய பண்புடைய ஒரு உள்ளூர் தலைவரை கட்டியெழுப்ப போகிறோம் என்று கருதி வாக்களித்தீர்களா? உங்களுடைய ஊரவர்; உங்களுடைய சமயத்தவர்; உங்களுடைய சாதி ஆள்; உங்களுடைய குறிச்சியைச் சேர்ந்தவர்; உங்கள் கண்ணுக்கு முன் தினமும் நடமாடுகின்றவர்; உங்களுக்கு தொண்டு செய்பவர்; உங்களுக்கு ஏதும் தேவையென்றால் ஆபத்தில் உதவுகிறவர்; என்று பார்த்து வாக்களித்தீர்களா? என்று கேட்டபோது, அங்கிருந்த பெரும்பாலானவர்கள் சொன்னார்கள்." உள்ளூர் உணர்வுகளின் அடிப்படையில் தான் வாக்களித்தோம்" என்று.

அதேசமயம் கட்சிகள் வாக்காளர்களை எவ்வாறு தெரிவு செய்கின்றன? கட்சித் தலைமைக்கு யார் விசுவாசமோ, கட்சித் தலைமைக்கு யார் வேண்டியவரோ, அவரைத்தான் பெரும்பாலான கட்சிகள் வேட்பாளராக நிறுத்தின. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்பாளர்களைத் தெரியும் பொழுது கட்சிகளிடம் பெரும்பாலும் பின்வரும் மூன்று அளவுகோல்கள் இருந்தன.

முதலாவது அளவுகோல், அவர் உள்ளூரில் வெல்லக்கூடியவராக இருக்க வேண்டும். இரண்டாவது அளவுகோல், அவர் கட்சித் தலைமைக்கு விசுவாசமானவராக, கீழ்ப்படிவு உள்ளவராக இருக்கவேண்டும். மூன்றாவது அளவுகோல் - அது சட்டத்தின் அடிப்படையிலானது - குறிப்பிட்டளவு விகிதம் பெண் வேட்பாளராக இருக்கவேண்டும். இந்த மூன்று அளவுகோல்களின் அடிப்படையில்தான் கட்சிகள் பெரும்பாலும் தமது வேட்பாளர்களைத் தேர்வு செய்கின்றன. அந்த வேட்பாளர்களுக்குத் தமிழ் மக்கள் இக் கட்டுரையில் முன்பு சொன்னபடி உள்ளூர் உணர்வுகளின் அடிப்படையில் வாக்களிக்கின்றார்கள்.

இப்பொழுது தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கிறது. வாக்களிப்பவர்களும் பெரிய அளவில் தமிழ் தேசிய நோக்கு நிலையை கொண்டவர்கள் அல்ல. வாக்களிக்கப்பட்டவர்களும் பெருமளவுக்கு உள்ளூர்ப் பண்புகளைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள்தான். இப்படிப்பட்ட தகுதிகளை கொண்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்க போகின்றார்கள்? இந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை கீழிருந்து மேல் நோக்கிய தேசியப் பண்புமிக்க உள்ளூர்த் தலைவர்களாகக் கட்டியெழுப்புவதற்கு அவர்களுடைய கட்சிகளிடம் எப்படிப்பட்ட தூர நோக்குடைய திட்டங்கள் உண்டு?

இல்லை. அப்படிப்பட்ட நீண்டகால நோக்கிலான திட்டங்கள் எதுவும் கட்சிகளிடம் இருப்பதாக தெரியவில்லை. நான் பார்த்த சில எரிபொருள் வரிசைகளில் கட்சி ஆட்களே நின்றார்கள். அவர்கள் நிற்பதில் தவறில்லை. அவர்கள் எரிபொருளை சேமிக்கட்டும். ஆனால் பிரச்சனை என்னவென்றால், எரிபொருளை சேமிப்பது போல தமது அரசியல் வாழ்வுக்கு அடிப்படையான அறிவுபூர்வமான விடயங்களை மூளைக்குள் சேமித்து வைத்திருக்கிறார்களா? அல்லது கட்சித் தலைமைகள் அதற்கு வேண்டிய அறிவூட்டல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனவா?

கனடாவில் இனஅழிப்பு அறிவூட்டல் வாரம் ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதை தாயகத்தில் உள்ள தமிழர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் பெரிய வெற்றியாக, அடைவாகக் கொண்டாடினார்கள். அது வெற்றிதான். சந்தேகம் இல்லை. ஆனால் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒன்று அடுத்த தலைமுறைக்கு வரலாறு கடத்தப்பட வேண்டும் என்று சிந்திப்பதைப் போல தாயகத்திலும் குறிப்பாக வாக்காளர்கள் மத்தியிலும் வேட்பாளர்கள் மத்தியிலும் அவ்வாறான அறிவூட்டல் செய்முறைகள் தேவையா? இல்லையா?

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் எல்லா இயக்கங்களிலும் அரசியல் பாசறைகளும் இருந்தன; ஆயுதப் பயிற்சி பாசறைகளும் இருந்தன. புதிய போராளிகளுக்கு அரசியல் பயிற்சிகளை வழங்கவென்று இயக்கங்களுக்கு வெளியில் இருந்து வளவாளர்கள் அழைத்துக் கொண்டு வரப்பட்டார்கள். எல்லாத் துறைகளிலும் போராளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. ஏன் அதிகம் போவான்? அண்மையில் உள்ளூராட்சி சபைகளில் தெரிவு செய்யப்பட்ட சிலரோடு உரையாடியபொழுது அவர்கள் சொன்னார்கள், தேசிய மக்கள் சக்தியானது தனது உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட கால ஒழுங்கில் கிரமமாக கூட்டங்களை ஒழுங்குபடுத்துகிறது. அந்தக் கட்சியின் பிரதான உழைப்பாளிகள் கிரமமாக சந்தித்துக் கொள்கிறார்கள். மக்கள் மத்தியில் தாங்கள் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் எத்தனை தமிழ்க் கட்சிகளிடம் உண்டு? தமது கட்சிப் பிரதானிகளுக்கும் தமது கட்சித் தொண்டர்களுக்கும் குறிப்பாக தமது விசுவாசப் பக்த கோடிகளுக்கும் அறிவூட்டுவதற்கும் தெளிவூட்டுவதற்கும் உரிய கட்டமைப்புகளை எத்தனை கட்சிகள் வைத்திருக்கின்றன?

முகநூலைப் பார்த்தால், குறிப்பாக முகநூலில் கட்சித் தலைவர்களின் விசுவாசிகள் மோதிக் கொள்ளும் விதத்தையும் அதில் அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளையும் நக்கல் நையாண்டிகளையும் தொகுத்துப் பார்த்தால், யாரிடமும் எந்த அறிவும் தூரநோக்கும் தெளிவும் முதிர்ச்சியும் மாண்பும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவெளியில் எப்படிப் பேச வேண்டும்? அரசியல் எதிரியை எப்படி மதிக்க வேண்டும்? அரசியல் எதிரியை எப்படி விமர்சிக்க வேண்டும்? விமர்சிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட விடயத்தில் எந்தெந்த துறைகளில் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்? என்ற விழிப்பு இல்லாத குருட்டு விசுவாசிகளின் கூட்டம் முகநூலிலும் சமூகவலைத்தளங்களிலும் படுகேவலமாக மோதிக் கொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாரும் குறிப்பிட்ட கட்சித் தலைமைக்கு விசுவாசிகள்தான். அல்லது குறிப்பிட்ட ஓர் அரசியல்வாதிக்கு விசுவாசிகள்தான். அங்கே கொள்கையெல்லாம் கிடையாது. ஏனென்றால் எல்லாருக்கும் பொதுவான ஒரு கொள்கை தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டி வைத்திருப்பதுதான். ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாகத் திரட்ட வேண்டும் என்ற தரிசனத்தைக் கொண்ட எந்த ஒரு அரசியல்வாதியும் அல்லது கட்சித் தொண்டரும் அதற்குரிய பக்குவத்தோடுதான் விமர்சனங்களை முன்வைக்க வேண்டும்.

இப்பொழுது உள்ளதில் பெரிய கூட்டாக எழுச்சி பெற்றிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவைக்குள் காணப்படும் கட்சிகள் முன்பு ஒருவர் மற்றவருக்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்களை சுமந்திரன் அணி தேடியெடுத்துப் பிரசுரித்து வருகிறது, தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கிய காலத்தில் இருந்து இந்த எதிர்ப் பிரச்சாரம் நடந்துவருகிறது. இங்கே ஒன்றைக் காணக்கூடியதாக உள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் கடந்த 15 ஆண்டுகளிலும் உதிர்த்த வார்த்தைகளில் பல அவர்களுக்கு எதிராகவே திரும்பி வருகின்றன. கடந்த 15 ஆண்டுகளாக அவர்கள் ஏனைய தமிழ்க் கட்சிகளை நோக்கி வீசியவை "பூமராங்குகள்" தான். இப்பொழுது தாங்கள் திட்டித் தீர்த்த வார்த்தைகளுக்கு, தாங்கள் கொட்டித் தீர்த்த வசைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய ஒரு நிலை. ஏன் இந்த நிலை ஏற்படுகிறது? அரசியல் நாகரிகத்தோடு எதிர்த் தரப்பை அணுகியிருந்திருந்தால், அல்லது விமர்சித்து இருந்திருந்தால், இன்றைக்கு அந்த விமர்சனங்கள் பூமராங்குகளாக திரும்பி வராது அல்லவா?

எனவே தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரியும் சித்திரம் என்னவென்றால், தமிழ்த் தேசியக் கட்சிகள் தலைமைக்கு விசுவாசமான குருட்டு விசுவாசிகளை உற்பத்தி செய்த அளவுக்கு அரசியல் விழிப்புடைய, அரசியல் தெளிவுடைய கட்சித் தொண்டர்களை பெரிய அளவில் உருவாக்கத் தவறியிருக்கின்றன. அதன் விளைவுகளைத்தான் இப்பொழுது ஒட்டுமொத்தமாக அறுவடை செய்ய வேண்டியிருக்கிறது. எனவே இனிமேலாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுடைய கட்சி முக்கியஸ்தர்களுக்கும் தொண்டர்களுக்கும் விசுவாசிகளுக்கும் அரசியல் விழிப்பூட்ட வேண்டும். அரசியல் தெளிவூட்ட வேண்டும். ஒரு சிறிய அரசற்ற தேசத்தை வார்த்தைகளால் குலைக்கக் கூடாது முகநூலில் சிதறடிக்கக்கூடாது என்று கற்பிக்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு, அதிலும் குறிப்பாக "ரிக் ரொக்" தலைமுறைக்கு வழிகாட்டும் தகுதிமிக்க தலைமைகளை, உள்ளூர்த் தலைமைகளைக் கட்டியெழுப்ப வேண்டும். எல்லாவற்றையும் நீண்ட கால நோக்கில் சிந்தித்துத் திட்டமிட வேண்டும். தேவையான வளங்களை, தேவையான உறவுகளை உள்ளூரிலும் அனைத்துலக அளவிலும் சேமிக்க வேண்டும். எரிபொருள் வரிசையில் மணித்தியாலக் கணக்காக நின்று எரிபொருளை சேமிப்பது போல.

# நீதியைத் தேடிக் கொள்வதற்கான புறக்கணிக்க முடியாத ஒரு சந்தர்ப்பம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியாகும்



தமிழ் மக்களுக்கு எதிராக அரசின் குற்றங்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஒன்றினால் தண்டனை விதிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாகக் கருதப்படும் செம்மணி படுகொலைகள் நிகழ்ந்த பிரதேசத்திலேயே புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பாரிய மனிதப் புதைகுழி தொடர்பில் வடக்கினதும், சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களினதும் கவனம் திரும்பியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் செம்மணி பிரதேசத்தின் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட 2025 மே மாதம் 15 ஆம் திகதியிலிருந்து நிதிப் பற்றாக்குறை காரணமாக ஜூன் மாதம் 7 ஆம் திகதி நிறுத்தப்படும் வரை சுமார் 20 பேரின் எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் செம்மணி பாரிய மனிதப் புதைகுழி, சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் கடும் அழுத்தங்களினால் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் பிரதேசம் பூராகவும் நூற்றுக்கணக்கான மனித உடல்கள் சட்ட விரோதமான முறையில் புதைக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டபோதிலும், அன்றிலிருந்து இன்று வரை இருந்த எந்த அரசாங்கமும் அது குறித்த விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. இம்முறை சித்துப்பாத்தி பாரிய மனிதப் புதைகுழி வெளிப்பட்டதும் தற்செயலாகவேயாகும். இடைநிறுத்தப்பட்டுள்ள அதன் அகழ்வுப் பணிகளுக்காக நிதியும், பாதுகாப்பும் வழங்குமாறு தமிழ் மக்களின் பிரதிநிதிகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் வழங்கும் அழுத்தம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுப்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார நாடாளுமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

செம்மணி பாரிய மனிதப் புதைகுழியை சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப, அகழ்வு செய்து, உடல்கள் மீட்கப்பட்டு, தடயவியல் மற்றும் நீதிமன்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இலங்கை அரசின் குற்றமாக பல தசாப்த காலமாக புதைக்கப்பட்டுள்ள நிறுவனமயப்படுத்தப்பட்ட குற்றவாளிகளின் பங்களிப்புக்களை அறிந்து கொள்ள முடியும் என்பது நீதிக்காகப் போராடும் சகலரினதும் நம்பிக்கையாகும்.

19 வயதுடைய கிரு'ாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவி 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07ஆம் திகதி செம்மணி பிரதேசத்தில் பாலியல் து்பிரயோகம் செய்து கொலை செய்யப்பட்டதுடன் அதே நாளில் தன் மகளைத் தேடிச் சென்ற அவரின் தாய் இராசம்மா குமாரசாமி, தம்பியான பிரணவன் குமாரசாமி மற்றும் குடும்ப நண்பரான கிருபாகரன் ஆகியோரையும் கொலை செய்த குற்றம் தொடர்பில் 09 பேர் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். 08 இராணுவ சிப்பாய்களும், ஒரு பொலிஸ் சிப்பாயுமே அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். 1997 நவம்பர் மாதம் 18 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமனறத்தில் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. நீதிமன்ற நடவடிக்கைகளின் முடிவில் அதாவது 1998 ஜூலை மாதம் 03 ஆம் திகதி குற்றம் சாட்டப்பட்ட 09 பேரும் அது தொடர்பில் குற்றவாளிகள் என்பது உறுதிப்படுத்தப்பட்டு, நிமல் திஸாநாயக்க, காமினி அபேரத்ன, அண்ட்ரூ சோமவங்' ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அவர்களில் ஆறு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன் எஞ்சிய மூவருக்கும் 20 வருட சிறைத் தண்டனையும் ரூபாய 50,000/= வீதம் அபராதமும் விதிக்கப்பட்டது.

இராணுவச் சிப்பாய்களான சோமரத்ன ராஜபக்ஷ, ஆர்.எல்.எம். ஜயசிங்க, ஏ.எஸ். பி.பெரேரா, டி.எம்.ஜயதிலக மற்றும் டி.வி இந்திரஜித் குமார மற்றும் பொலிஸ் சிப்பாயான ஜி. பிரதீப் பிரியதர்ஷன ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. டப்.ஈ.டப். அல்விஸ், டி.ஜி.முதுபண்டா மற்றும் ஏ.பி. நிஷாந்த ஆகிய இராணுவ சிப்பாய்களுக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சோமரத்ன ராஜபக்ஷ மற்றும் உயர் நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய ஐவரும் தமது தண்டனை உத்தரவை நீக்குமாறு கோரி 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் மேன்முறையீடு செய்தனர். எனினும் 2004 பெப்ரவரி 03 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் அந்த மேன்முறையீட்டை நிராகரித்து உயர் நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்தது.

1995 ஒக்டோபர் 17 ஆம் திகதி முப்படைத் தளபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் இலங்கையில் ஆயுதப் படையினரால் ஒருங்கிணைத்த நடவடிக்கை ஒன்று வடக்கில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் நோக்கம் ஐந்து ஆண்டுகளாக டுவுவுநு இன் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாண தீபகற்பத்தை மீண்டும் அரசின் கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வருவதாகும். 1996 மே மாத இறுதியாகும் போது யாழ்ப்பாண தீபகற்பத்தின் மக்கள் வசித்த பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. தாக்குதல்கள் காரணமாக இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருந்ததுடன் வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதில் ஏற்பட்ட பல இடர்ப்பாடுகள் காரணமாக மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினார்கள். இராணுவ வெற்றிகள் மூலம் யாழ்ப்பாணத்தின் தமிழ் மக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டு நிம்மதியைக் கொண்டு வந்ததாக ஆட்சியாளர்கள் நாவளவில் பெருமை பேசினாலும், யதார்த்தமோ வீதித் தடைகள், இராணுவ அடக்குமுறைகள் மற்றும் காணாமலாக்கப்படுதல் போன்றனவாகவே இருந்தன.



யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் வித்தியாலயத்தில் தரம் 12 இல் கல்வி கற்ற மாணவியான கிருஷாந்தி குமாரசாமி காணாமலாக்கப்படுதல் உச்சம் தொட்டிருந்த 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி க.பொ த. (உயர் தர) இரசாயனவியல் பரீட்சைக்குத் தோற்றி வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது இராணுவ வண்டியில் மோதி இறந்த தன்னுடைய சம வயதுத் தோழி கணநாதன் தமயந்தியின் மரணத்திற்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கும் போது காணாமல் போகிறார். இடைவழியில் அவர் யாழ்ப்பாண நகரிற்கு அருகில் உள்ள கைதடி அருதில் உள்ள செம்மணி வீதித் தடையில் கைது செய்யப்பட்டமையானது அதனைக் கடந்து சென்று கொண்டிருந்த வேறு பயணிகளின் முன்னிலையிலாகும். பின்னர் இராணுவ சிப்பாய்கள் குறித்த மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்தனர்.

கிருஷாந்தி பாடசாலை முடிவடைந்து வீட்டுக் செல்லும் வழியில் இராணுவ வீதித் தடையில் கைது செய்யப்பட்டிருப்பதாக பிரதேசவாசிகள் மூலம் அறிந்து கொண்ட தாய் தனது மகளைத் தேடி அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு ஓடிச் சென்றுள்ளார். அவ்வாறு தேடிச் சென்ற ஓய்வு பெற்ற பாடசாலை அதிபரான அவரின் தாய், அவருடன் சென்ற 16 வயதுடைய சகோதரன் மற்றும் அயல் வீட்டுக்காரர் ஒருவர் இந்த தேடிச் சென்ற பயணத்தின் பின்னர் காணாமல் போகிறார்கள். அதன் பின்னர் அவர்களைத் தேடிச் சென்றவர்களுக்கு கிடைத்தது காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் வழமையாக இராணுவத்தினரால் வழங்கப்படும் பதிலாகும். அதாவது அந்த நான்கு போரையும் தாம் கைது செய்யவில்லை என்பதாகும்.

கொழும்பிலிருந்து வெளியாகும் “வீரகேசரி” பத்திரிக்கை இந்த செய்தியைப் பிரசுரித்ததுடன், செப்டம்பர் 16ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களால் இந்த விடயம் நாடாளுமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி இது தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மேன்முறையீடு ஒன்றை மேற்கொண்டது.

கிருஷாந்தி குமாரசாமியின் படுகொலை இன்னொரு காணமல் போதலாக மறைந்து போகவில்லை. அது யாழ்ப்பாண பிரஜைகளை காணாமலாக்கிக் கொலை செய்து மண்ணுக்கடியில் ஒழித்து வைத்த இடங்களில் இருந்து வெளியே கொண்டு வருவதை யுத்தம் நிறைவடைவதற்கு முன்னரே ஆரம்பிப்பதற்கு காரணமாக அமைந்தது. வடக்கில் போன்றே தெற்கு வாழ் சமூகத்தையும், சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சியடையச் செய்த இந்த மாணவியின் கொலையை காலம் மறக்கடிக்கும் வரை தவிர்த்து இருப்பதற்கு அப்போது நாட்டின் ஆட்சியாளராக இருந்த சந்திரிக்கா அரசுக்கு முடியாமல் போனமை இதற்கான காரணமாகும். அதனால் கொலையாளிகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்து தண்டனை வழங்குவதற்கும், அதன்போது மரண தண்டனை வழங்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்திய செம்மணி பாரிய மனிதப் புதைகுழியை தோண்டி நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பின்னணி ஒன்று உருவானது.

கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவியைக் கொலை செய்த குற்றம் தொடர்பில் இலங்கை இராணுவத்தின் மேலும் நான்கு சிப்பாய்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் சோமரத்ன ராஜபக்ஷ கொழும்பு உயர் நீதிமன்ற சாட்சிக் கூண்டில் நின்று கிருஷாந்தி குமாரசாமி கொலைக்கும் தனக்கும் தொடர்பில்லை எனவும், தான் அந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் குற்றமற்றவர் எனவும் வாக்குமூலம் வழங்கினார்.

செம்மணி பிரதேசத்தில் பாரிய மனிதப் புதைகுழிகள் இருப்பதாக அவர் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் வெளிப்படுத்தினார். அனேகமாக எல்லா மாலைப் பொழுதுகளிலும் அங்கே பிரேத உடல்கள் கொண்டு வரப்பட்டதுடன், அவற்றைப் புதைக்கும் படி உயர் அதிகாரிகள் வழங்கிய உத்தரவை சிப்பாய்கள் செயற்படுத்தியதாக குறிப்பிட்டார். “நாங்கள் யாரையும் கொலை செய்யவில்லை. நாங்கள் உடல்களை மாத்திரம் புதைத்தோம். 300, 400 உடல்களை புதைத்த இடங்களைக் காட்ட முடியும்” அவர் விபரித்த இடம் அப்போது அவர் பணியாற்றிய செம்மணியாகும்.

அதன் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது. மூன்று சந்தர்ப்பங்களில் விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட நீதவான்கள் அந்தப் பொறுப்பை ஏற்க மறுத்தமை அதற்கான முக்கியமான காரணமாகும். அவர்கள் “வெளி அழுத்தங்கள்” ஏற்படுத்தப்பட்டமையே அதற்கான காரணம் என்று செல்லியிருந்தார்கள்.



(தொடர்ச்சி 20 பக்கம்)

உலக செய்திகள்
World News

# இஸ்ரேல் என்னும் தேசம் நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை இத்தகைய தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை

## ஈரானின் "உண்மையான வாக்குறுதி 3": ஈரானின் ஏவுகணைகள் மத்திய கிழக்கின் இராணுவ சமநிலையை மாற்றியமைத்துள்ளது







**ஈரானின் அழிவுகரமானதும் அறிவாற்றல் மிகுந்ததுமான பதிலடி: பிராந்திய சக்தியில் மாற்றம்**

நவீன வரலாற்றில் முதல் முறையாக, இஸ்ரேலின் தெல் அவிவ் ஈரானின் பலுானிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களால் நேரடியாகவும் அழிவுகரமாகவும் பாதிக்கப்பட்டுள்ளது. "உண்மையான வாக்குறுதி 3" என்ற குறியீட்டுப் பெயரில் நடத்தப்பட்ட ஈரானின் இராணுவ நடவடிக்கையில், துல்லியமான ஏவுகணைத் தாக்குதல்கள் இஸ்ரேலின் புகழ்பெற்ற "அயர்ன் டோம்" (Iron Dome) வான்பாதுகாப்பு முறையை முடக்கியதோடு, நகரத்தின் பகுதிகளை போர்க்களமாக மாற்றியுள்ளன. இஸ்ரேல் என்னும் தேசம் நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை இத்தகைய தாக்குதல் நடத்தப்படவில்லை.

இது ஒரு குறியீட்டு பதிலடி மட்டுமல்ல. மத்திய கிழக்கின் சக்தி இயக்கவியலில் இது ஒரு திருப்புமுனையாகும் - ஈரான் தனது தடுப்புத் திறன், தாக்குதல் திறன் மற்றும் மூலோபாய ஆழத்தை புதிய மட்டத்தில் நிரூபித்துள்ளது.

**சமன்பாட்டை மாற்றிய ஏவுகணைகள்**

ஈரானின் ஏவுகணைத் தாக்குதல், இஸ்ரேலின் தொடர்ந்த ஆக்கிரமிப்புகளுக்கு பதிலடியாக வந்தது. இதில் ஈரானின் அணு உள்கட்டமைப்புகளை இலக்காக்கிய இரகசிய நடவடிக்கைகளும் அமெரிக்க ஆதரவில் நடத்தப்பட்ட தாக்குதல்களும் அடங்கும். மீண்டும் மீண்டும் மறுப்புகள் இருந்தபோதிலும், உளவு மூலங்கள் மற்றும் இராணுவ வீடியோக்களில் இருந்த ஆதாரங்கள், ஈரான் தனது பிரதேசத்திலிருந்து பல மேம்பட்ட ஏவுகணை அமைப்புகளை ஏவியதை உறுதிப்படுத்துகின்றன. இதில் பழைய ஷஹாப் (Shahab) ஏவுகணைகள் மற்றும் மேக் 13 வேகத்தை தாண்டக்கூடிய, வளிமண்டலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தடம் திரும்பக்கூடிய, துல்லியமான தாக்குதல் திறன் கொண்ட ஃபத்தாஹ் (Fattah) ஹைபர்சோனிக் ஏவுகணையும் அடங்கும்.

இஸ்ரேலின் ரெகோவோட்டில் உள்ள வைஸ்மேன் இன்ஸ்டிடியூட் (Weizmann Institute) அழிந்தது. இது இஸ்ரேலின் இராணுவ உள்கட்டமைப்புக்கு மட்டுமல்ல, அதன் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும் ஒரு பெரிய அடியாகும். இந்த ஆராய்ச்சி மையம் இஸ்ரேலின் ஆயுத மேம்பாடு மற்றும் AI இராணுவ ஒருங்கிணைப்புக்கு முக்கியமானதாக இருந்தது.

**மூலோபாய இராணுவ இலக்குகள் தாக்கப்பட்டன**

அழிக்கப்பட்ட முக்கியமான இலக்குகளில் பின்வருவன அடங்கும்:
- வைஸ்மேன் இன்ஸ்டிடியூட்டின் பாதுகாப்பு ஆய்வகங்கள்: AI-வழி நடத்தப்படும் ட்ரோன் திட்டங்கள் மற்றும் அணு அமைப்புகளின் மேம்பாட்டுக்கான மையம்.
- வான்பாதுகாப்பு மையங்கள்: அயர்ன் டோம் பேட்டரிகள் பல ஏவுகணைகளை தடுக்க தவறின. சில தடுப்பு ஏவுகணைகள் நகர்ப்புற குடியிருப்புகளில் விழுந்தன.
- இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் (IDF) உளவு வசதிகள்: குறிப்பிட்ட சேதம் வகைப்படுத்தப்படவில்லை, ஆனால் செயற்கைக்கோள் படங்கள் மற்றும் கசிந்த தகவல்கள் இராணுவ தொழில்நுட்ப மையங்களுக்கு கனரக தாக்குதல்கள் நடந்ததை காட்டுகின்றன.

இஸ்ரேலின் பொதுவாக ஊடுருவ முடியாத இராணுவ மற்றும் உளவு அமைப்பு, வெளிநாட்டு படைகளால் அல்ல, ஈரானின் பிரதேசத்திலிருந்து வந்த ஏவுகணைகளால் வெளிப்படுத்தப்பட்டது.

**ஜெனரல் மௌசவியின் கடுமையான எச்சரிக்கை**

ஜூன் 18ம் தேதி, ஈரான் ஆயுதப்படைகளின் தலைமை ஸ்டாஃப் மேஜர் ஜெனரல் அப்தோல்ரஹீம் மௌசவி, தற்போதைய பதிலடி நடவடிக்கைகள் வெறும் "தடுப்பு எச்சரிக்கைகள்" மட்டுமெனவும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு தொடர்ந்தால் எதிர்காலத்தில் "தண்டனை நடவடிக்கைகள்" இருக்கும் என்றும் பொதுவாக அறிவித்தார். அவரது தொனி தெளிவாக இருந்தது: ஈரான் தனது மூலோபாய ஆயுதக் களஞ்சியத்தை இன்னும் முழுமையாக பயன்படுத்தவில்லை.

அமெரிக்க - இஸ்ரேல் உளவு மதிப்பீடுகளின்படி, ஈரானிடம் 20,000 முதல் 50,000 வரை ஏவுகணைகள் உள்ளன, மேலும் ஒரு நாளைக்கு 50 ஏவுகணைகள் வரை உள்நாட்டில் தயாரிக்கும் திறன் உள்ளது. இது இஸ்ரேலின் பாதுகாப்புத் திட்டமிடுநர்களுக்கு ஒரு கனவுக் காட்சியாகும்.

**ஒரு உடைந்த கோட்பாடு: இஸ்ரேலின் அயர்ன் டோம் தோல்வி**

அயர்ன் டோமின் குறியீட்டு மற்றும் மூலோபாய தோல்வி இந்த மோதலின் மிகப்பெரிய அதிர்ச்சியாகும். பல தசாப்தங்களாக, இஸ்ரேலின் அடுக்கு வான்பாதுகாப்பு அமைப்புகள் ஒரு உளவியல் மற்றும் செயல்பாட்டுக் கேடயமாக இருந்தன. ஆனால் ஜூன் 17ம் தேதி இரவு, பல ஏவுகணைகள் அதன் பாதுகாப்பை ஊடுருவின. மற்றவை பேரழிவு தோல்விகளைத் தூண்டின.

இஸ்ரேலின் தடுப்பு ஏவுகணைகள் mid-air-ல் தோல்வியடைந்து குடியிருப்புகளைத் தாக்கியதால், இஸ்ரேலின் மிகவும் நம்பப்படும் பாதுகாப்பு அமைப்பின் செயல்திறன் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன - குறிப்பாக ஈரானின் மேம்பட்ட ஏவுகணைத் தொழில்நுட்பம் மற்றும் saturation தந்திரங்களை எதிர்கொள்ளும்போது.

**இமாம் அலி கமெனெயின் அறிவிப்பு: சரணடையவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்**

ஈரானின் உச்ச தலைவர் அயத்தோல்லா அலி கமெனெனி ஒரு கடுமையான அறிக்கையை வெளியிட்டு கூறினார்:

"சயோனிஸ்ட் ஆட்சி மற்றும் அமெரிக்க தலையீட்டு அமைப்பு ஒரு மாற்ற முடியாத தவறை செய்துள்ளன. அவர்கள் ஒரு கனமான, சரிசெய்ய முடியாத விலையை செலுத்துவார்கள். எங்கள் விண்வெளியை மீறியதை மன்னிக்க மாட்டோம், எங்கள் தியாகிகளின் இரத்தத்தை மறக்க மாட்டோம். போருக்கு போர், குண்டுக்கு குண்டு - நாங்கள் ஒருபோதும் ஒரு திணிக்கப்பட்ட போரையோ அல்லது சமாதானத்தையோ ஏற்க மாட்டோம்."

இது ஈரானின் நீண்டகால நிலைப்பாட்டை எதிரொலிக்கிறது: எதிர்ப்பு, பதிலடி மற்றும் உறுதிப்பாடு - ப்ராக்ஸிகள் மூலம் மட்டுமல்ல, நேரடியாக, இறையாண்மை கொண்ட தாக்குதல் திறனுடன்.

**விளிம்பில் உள்ள ஒரு பிராந்தியம்**

இந்த மோதல் மத்திய கிழக்கை அணு பேரழிவிலிருந்து மில்லிமீட்டர் தூரத்தில் நகர்த்தியுள்ளது. ஈரானின் அணு வசதிகளில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தியதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளன - இவை அமைதியான மற்றும் IAEA மேற்பார்வையின் கீழ் உள்ளதாகக் கூறப்படுகிறது. டெஹ்ரானின் பதிலடி, பொறுமை தீர்ந்துவிட்டது என்பதை சைகை செய்கிறது.

ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான ஒரு கற்பனை மோதல் காட்சி இப்போது உண்மையாகிவிட்டது - போர்க்களம் இப்போது நிழல்களில் இல்லை, ஆனால் பகல் வெளிச்சத்தில், ஏவுகணைகள், இடிந்த கட்டிடங்கள் மற்றும் தீயுடன் உள்ளது.

"உண்மையான வாக்குறுதி 3"ல் ஈரானின் பதிலடி சிவப்புக் கோடுகளை மீண்டும் வரையறுத்துள்ளது. இஸ்ரேலின் பிராந்திய இராணுவ தோல்வியுறாத்தன்மை குறித்த கட்டுக்கதை உடைந்துள்ளது. அமெரிக்க - இஸ்ரேல் திட்டமான சேதம், தடைகள் மற்றும் இரகசிய தாக்குதல்கள் மூலம் ஈரானை தனிமைப்படுத்தி முடக்கும் முயற்சி ஒரு கடுமையான திருத்தத்தை சந்தித்துள்ளது.

அடுத்து என்ன நடக்கும் என்பது மத்திய கிழக்கின் அடுத்த நூற்றாண்டின் புவியியல் அரசியலை வரையறுக்கும் - அது முழு அளவிலான போராக உயர்ந்தாலும் அல்லது சக்தி சமநிலையை மீண்டும் வரையறுத்தாலும். ஆனால் ஒரு உண்மை தெளிவாக உள்ளது: ஈரான் தனது பதிலடி திறனை வார்த்தைகளில் அல்ல, அழிவுகரமான துல்லியத்துடன் நிரூபித்துள்ளது.

- ஈழத்து நிலவன் - (19-062025)



# "இணையத்தில் விமர்சனத்துக்குள்ளான ஆபத்தான டிகிரி மேம்பாலம் மாற்றி அமைக்கப்படும்" — ரெயில்வே துறை அறிவிப்பு

மத்தியப் பிரதேசம் போபாலில் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம் ஒன்று இணையத்தில் வைரலாகியுள்ளது. ரூ.18 கோடியில் கட்டப்பட்ட, 648 மீட்டர் நீளம், 8.5 மீட்டர் அகலம் கொண்ட இந்த மேம்பாலம் திரும்புவதற்கு 45 பாகை வளைவாக இல்லாமல் 90 பாகை வளைவில் திரும்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இணையத்தில் பலரும் இந்த மேம்பால புகைப்படங்களை பகிர்ந்து இந்த மேம்பாலத்தால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது என அம்மாநில பாஜக அரசுக்கு எதிராக கருத்து தெரிவித்தனர்.

இந்த மேம்பாலத்தை காங்கிரஸ் கட்சி தனது சமூக ஊடகங்களில் கடுமையாக விமர்சித்த நிலையில், மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் ராகேஷ் சிங் இந்த பிரச்சினையை குறித்து ஆராய்வதாக உறுதியளித்தார்.

இந்நிலையில், விமர்சனத்திற்கு உள்ளான 90 பாகை எல் வடிவ ரயில்வே மேம்பாலம், மாற்றியமைக்கப்பட உள்ளதாக ரயில்வே துறை அறிவித்துள்ளது.

# ஈரானின் புஷேர் அணுமின் நிலையத்தை தாக்கினால் செர்னோபில் போல பேரழிவு

## ரஷ்யா எச்சரிக்கை

ஈரானின் புஷேர் அணுமின் நிலையத்தின் மீதான இஸ்ரேலிய தாக்குதல், செர்னோபில் மாதிரியான பேரழிவை ஏற்படுத்தும் என்று ர்யாவின் அணுசக்தி நிறுவனம் எச்சரித்துள்ளது.

புஷேர் அணுமின் நிலையத்தை தாக்கியதாக இஸ்ரேலிய ராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறினார். ஆனால், அதன் பின்னர் ஓர் இஸ்ரேலிய ராணுவ அதிகாரி இந்த அறிக்கையை தவறானது என்று மறுத்தார்.

ஆனாலும், புஷேர் தளம் தாக்கப்பட்டதை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ முடியாது என்று இஸ்ரேல் தரப்பு கூறியது. இந்தப் பின்னணியில்தான், ஈரானின் புஷேர் அணுமின் நிலையத்தின் மீதான இஸ்ரேலிய தாக்குதல், செர்னோபில் மாதிரியான பேரழிவை ஏற்படுத்தும் என்று ரஷ்யாவின் அணுசக்தி நிறுவனம் எச்சரித்துள்ளது.

புஷேர் ஈரானில் இயங்கும் ஒரே அணுமின் நிலையம் ஆகும், இது ரஷ்யாவால் கட்டப்பட்டது. இன்று அதிகாலையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், "இஸ்ரேல் ஈரானின் அணுசக்தி திறன்களை வலுக்கட்டாயமாக குறைக்க முயன்றாலும் புஷேர் தளத்தில் அதிக அணுசக்தி வசதிகளை உருவாக்கும் மாஸ்கோவின் தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று ரஷ்யாவுக்கு இஸ்ரேல் உறுதியளித்துள்ளது" என்றார்.

மேலும், ரஷ்ய நிபுணர்கள் பணிபுரியும் ஈரானில் உள்ள புஷேர் அணுமின் நிலையம் மீதான வான்வழித் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலை ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியது.

# Muraly Srinarayanathas of Computek College, becomes one of the 26 best Ontario's Entrepreneurs Of The Year 2025

கனடிய செய்திகள் Canadian News

## கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் சிறந்த தொழிலதிபர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள Computek College, திரு. முரளி நாராயணதாஸ்




130க்கும் மேற்பட்ட ஒன்றாரியோ மாகாணத்தின் தொழிலதிபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற 22 வெற்றியாளர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் முகமாக அண்மையில் நடத்தப்பெற்ற் தெரிவுத் திட்டத்தின் படி 2025ம், ஆண்டின் EY கனடா நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளவர்களில் தமிழ்ச் சமூகத்தில் நன்கு அறியப் பெற்றவரான Computek College, திரு. முரளி நாராயணதாஸ் அவர்களும் தெரிவு செய்யப்பெற்றுள்ளார் என்பதை கனடா உதயன் ஆசிரிய பீடம் பெருமையுடன் அறிவிக்கிறது.

இந்த 22 வெற்றியாளர்களும் ஒன்றாரியோ மாகாணத்தில் மாத்திரமல்ல கனடிய தேசத்திலும் புதுமைகளைத் தூண்டுவது மட்டுமல்லாமல் - கனடிய வர்த்தகப் பரப்பை வலுப்படுத்துவதில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இறுதிப் போட்டியாளர்கள் அனைவரும் EY கனடா நிறுவனத்தினால் சமூக தாக்கம் மற்றும் நோக்கம் ஆகியவற்றிற்காக ஒரு சுயாதீன தீர்ப்புக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதையும் நாம் அறியத்தருகின்றோம்.

130க்கும் மேற்பட்ட இறுதிப் போட்டியாளர்களிலிருந்து இந்த வருடம் மேற்படி 26 வெற்றியாளர்கள் அறிவிக்கப்பெற்றுள்ளார்கள்.

"இந்த ஆண்டின் இறுதிப் போட்டியாளர்கள் வணிகத் தலைவர்கள் மட்டுமல்ல, அவர்கள் தங்கள் தொழில்கள் மற்றும் சமூகங்களை வடிவமைக்கும் தொலைநோக்கு பார்வையாளர்கள்" என்று ஆண்டின் EY தொழில்முனைவோர் கனடா திட்ட இயக்குனர் ரேச்சல் ரோட்ரிக்ஸ் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். "தொழில்நுட்பம் முதல் விருந்தோம்பல், எரிசக்தி, ரியல் எஸ்டேட், சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் பலவற்றிற்கு, இந்த தொழில்முனைவோர் அனைவரும் சவால்களைச் சமாளித்து, நம் அனைவருக்கும் பயனளிக்கும் புதுமையான தீர்வுகளைக் கண்டுபிடித்து வருகின்றனர்." என்றும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

**22 தொழிலதிபர்களின் பெயர்கள் கீழே காணப்படுகின்றன:**

- Andrew Morgan of Ascension Automation Solutions Ltd.
- Hans Jain of Atria Development Corporation
- Muraly Srinarayanathas of Computek College
- Richard Abboud of Forum Asset Management
- Trevor Langdon of Green Standards
- Victoria Sopik of Kids & Company
- Adam Bercovici, Michael Kravshik of LumiQ
- Meeta Ingram of MI Concept + Design Inc.
- Scott Marcaccio of Myo
- Rob Hallewick of Nerva Energy
- Margaret Coons of Nuts For Cheese
- Isaac Langleben, Jacqueline Prehogan of Open Farm Pet
- Kevin Gauci of Optimus SBR
- Sam Osmow of Osmow's
- Morgan Marlowe of Perkopolis
- Eddie Madaan, Apaar Madan of PostGrid
- Phil St-Cyr of Rootree Inc.
- Yvonne Chan of Santé Circle Health
- Shamira Jaffer of Signifi Solutions Inc.
- Vitaly Pecherskiy of StackAdapt
- Rocco Volpe of Structform International Limited
- Ray Gupta of Sunray Group of Hotels



கனடிய செய்திகள் Canadian News

## இலங்கை வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனை கனடிய பாராளுமன்றத்திற்கு அழைத்துச் சென்ற கனடா உதயன் குழுவினர்

கனடாவில் நடைபெற்ற "உதயன்" சர்வதேச விருது விழாவில் "வாழ்நாள் சாதனையாளர் விருது-இலங்கை" என்னும் உயர் கௌரவத்தைப் பெறுவதற்காக கனடா வந்திருந்த இலங்கை வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களை கனடிய பாராளுமன்றத்திற்கு அழைத்து வரும் வண்ணம் விடுக்கப்பெற்ற அழைப்பின் பேரில் உதயன் பிரதம ஆசிரியர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

அதன்பிரகாரம் ரொறன்ரோவிலிருந்து "உதயன்" நண்பர்கள் சிலர் இணைந்து 18ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் ஒட்டாவா பாராளுமன்ற வளாகத்திற்கு மேற்படி குழுவினர் சென்றிருந்தனர்.

அங்கு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் ஒட்டாவா அலுவலக உத்தியோகத்தர்கள் சிலரால் வரவேற்கப்பெற்ற உதயன் குழுவினர் பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் மக்கள் சபை மற்றும் பல இட்ங்களையும் பார்வையிட்டனர்.













தொடர்ந்து கனடியப் பாராளுமன்றம் பிற்பகல் கூடியபோது "அங்கத்தவர்களின் கேள்வி நேரத்தின்" போதும் சபையில் அமர்ந்திருந்து நிகழ்வுகளையும் உரையாடல்களையும் கண்டு களித்தனர்.

தொடர்ந்து கனடா உதயன் குழுவினரை சந்தித்து உரையாடிய ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் Shaun Chen மற்றும் மிசிசாகா - லேக்சோர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் Charles Sousa ஆகியோரையும் சந்தித்து உரையாடி தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## Carefirst Family Health Team

### Accepting New Patients
### புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




EXPERIENCE BRAMPTON

Saddle up, Brampton
## CANADA DAY
Country Style

Performances by
### DALLAS SMITH
+ SPECIAL GUEST
JAMES BARKER BAND
TEIGEN GAYSE
QUOTE THE RAVEN
LEAH HOLTOM
KAT PINHORN
DEEJAY T-JR



Tuesday
July 1
12 – 10 PM
Chinguacousy Park

Hosted by
Jesse Jones

Free Concert
Family-Friendly Activities
Inflatable Zone
Food Vendors

Fireworks presented by
Tim Hortons

Generously sponsored by
GENESIS BRAMPTON
SKYDOME AUTO & TRUCK CENTRE

BRAMPTON brampton.ca/canadaday
Funded by the Government of Canada | Canada

## VILLAGE NISSAN
## தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



### 25 SENTRA
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



### 25 KICKS PLAY
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




### 25 ROGUE
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



Sajanthan Vijayakumar
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன்
# வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா
# விஞ்ஞாபனம்-2025

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினேழாவது முறையாக நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் மூன்றாம் நாள் (ஆங்கிலம்16-05-2025) வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 26ம் நாள் ஆங்கிலம் 08-06-2025 ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 09-06-2025 திங்கள்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
சிவாகம பாலசூரியர், சிவாகமவித்வான்
சிவஸ்ரீ கோகுலநாத குருக்கள்
ஸ்ரீநாகபூசணி அம்மன் திருக்கோவில் U.K. லண்டன் ஸ்தாபகர்
மற்றும் பிரதம குருக்கள்

**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ விஸ்வநாத கைலசநாத குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ சண்முக ஜனார்த்தன குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

15-05-2025 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 16-05-2025 | வெள்ளி | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 17-05-2025 | சனி | திரு. சுகுனேந்திரன் வாசுகி குடும்பம்-புங்குடுதீவு<br>சிவநேசராசா காளிராசா குடும்பம்-மீசாலை | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 18-05-2025 | ஞாயிறு | திரு. பாலகாந்தன் கனகசபை குடும்பம்<br>கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம்<br>சுழிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 19-05-2025 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம்<br>கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 20-05-2025 | செவ்வாய் | திரு. பாலச்சந்திரன் ரதிமாலா குடும்பம்<br>பிருந்தாவன உணவகம் | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 21-05-2025 | புதன் | சிவகுமார் தியாவி<br>திருச்சி | ஜெயராம் அபிராமி குடும்பம்<br>மட்டுவில் | கப்பல் திருவிழா |
| 07 | 22-05-2025 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம்<br>தையிட்டி, காங்கேசன்துறை | பசுபதிப்பிள்ளை குமரசற்குணன்<br>குறிகட்டுவான் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 23-05-2025 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம்<br>தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம்<br>சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 24-05-2025 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம்<br>அல்வாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம்<br>தாவடி | மூஷிக வாகனம் |
| 10 | 25-05-2025 | ஞாயிறு | திரு. தவராசா சிவசோதி குடும்பம்<br>அனலைதீவு | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம்<br>Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 26-05-2025 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம்<br>கோப்பாய் | ஓர் அன்பர் | மயில் வாகனம் |
| 12 | 27-05-2025 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம்<br>நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன்,<br>தனுஷன், அனோயன், நிக்ஷன்<br>குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 28-05-2025 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம்<br>(கனடா) | ஓர் அன்பர் | குதிரை வாகனம் |
| 14 | 29-05-2025 | வியாழன் | ஓர் அன்பர் | செந்தூரன் லாவன்யா குடும்பம்<br>மட்டக்களப்பு | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 30-05-2025 | வெள்ளி | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில்<br>ONGO I LOGISTIC | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம்<br>பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 31-05-2025 | சனி | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம்<br>புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 01-06-2025 | ஞாயிறு | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம்<br>சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம்<br>-மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 02-06-2025 | திங்கள் | ஓர் அன்பர் (பிரம்ரன்) | திரு. ஜெய்கீதா குடும்பம்<br>கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 03-06-2025 | செவ்வாய் | திரு. சந்திரமோகன்<br>சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம்<br>Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 04-06-2025 | புதன் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம்<br>அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 05-06-2025 | வியாழன் | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன்<br>குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 06-06-2025 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 07-06-2025 | சனி | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம்<br>சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 08-06-2025 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார்<br>தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா<br>தேரடி உற்சவம் |
| 25 | 09-06-2025 | திங்கள் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லெட்சுமன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம்<br>தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 10-06-2025 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | பிராயச்சித்தம் |
| 27 | 13-06-2025 | வெள்ளி | | லக்ஷி சுப்பர் மார்க்கட் | வைரவர் மடை |
| 28 | 14-06-2025 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் - | அனலைதீவு | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி நான்காவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்.**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - முனிராஜ் முனிரெத்தினம்
அர்ஜுணன் கிருஷ்ணகுமார் - பழனிவேல் கோபாலகிருஷ்ணன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

# வெகு விமரிசையாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழா – 2025

## ஏழு சாதனையாளர்களுக்கு அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மேடையில் சூழ்ந்து நிற்க அளிக்கப்பெற்ற உயர் கௌரவம்





கனடா உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பெற்று 10வது வெற்றிகரமான ஆண்டில் (1996) ஆரம்பிக்கப்பெற்ற நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவின் 19வது ஆண்டாக இவ்வாண்டின் விழா கடந்த 14ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுரோ நகரில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் சிறப்பாக நடைபெற்றது.

கனடாவில் பல வர்த்தக முயற்சிகளில் ஈடுபாடு கொண்டு வெற்றிகரமாக இயங்கிவரும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவிலும் அரசியல் மற்றும் சமூகத்தலைவர்களின் ஆசிகளோடும் மேற்படி விழா சிறப்பாக அரங்கேறியது.

இவ்வருடம் ஏழு சாதனையாளர்களுக்கு. அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மேடையில் சூழ்ந்து நிற்க அளிக்கப்பெற்ற உயர் கௌரவத்தை கண்டு களித்த பார்வையாளர்கள் கரகோசம் செய்து தங்கள் பாராட்டுக்களையும் ஒப்புதல்களையும் அங்கீகாரத்தையும் வழங்கினார்.

இவ்வருடத்தின் விழாவில் உதயன் கலை இலக்கிய மேன்மை விருது: திருமதி. வசந்தா டேனியல் அவர்களுக்கும், உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது - ஒன்ராரியோ: திரு. தாமோதரம்பிள்ளை யோகநாதன் அவர்களுக்கும், உதயன் தலைமைத்துவ விருது: திருமதி. இந்திராணி நாகேந்திரம் அவர்களுக்கும், உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது - இலங்கை: பத்திரிகையாளர் “வீரகேசரி” சந்திரலிங்கம் ஸ்ரீகஜன் அவர்களுக்கும், உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது - கியுபெக்: திரு. தங்கா இளையதம்பி அவர்களுக்கும், உதயன் இனங்களுக்கிடையிலான சமூக நல்லுறவு விருது: மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் (MPP Aris Babikian) அவர்களுக்கும் உதயன் இளையோர் அடையாள விருது: திருமதி. தசா குகன் அவர்களுக்கும் பெற்றன.

விழாவின் ஆரம்பத்திலிருந்து திருமதி. ஜனனி ஜெயரட்ணராஜா மற்றும் பிரான்ஸ் தேசத்திலிருந்து வருகை தந்திருந்த திரு. நாகேஸ்வரன் குருபரன் ஆகியோர் முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் தொகுத்து வழங்கினார்கள்.

வரவேற்புரையை உதயன் விருது விழாக் குழு உறுப்பினர் மரியாம்பிள்ளை மரியராசா வழங்கினார். சிறப்புரைகளை சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், பாஸ்டர் ஜெயானந்தசோதி, கலாநிதி பகாத் ஏ. மஜீத் ஆகியோர் நிகழ்த்தினர்.

அழைக்கப்பெற்றிருந்த மத்திய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் என பத்துக்கும் மேற்படி அரசியல் தலைவர்களும் வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் விழாவிற்கு அனுசரனை வழங்கியவர்களாகவும் அழைக்கப்பட்டவர்கள் மற்றும் கவிஞர்கள் எழுத்தாளர்கள் என அனைத்து தரப்பினரும் விழாவில் கலந்து கொண்டும் விருதாளர்களைப் பாராட்டியும் விருந்துண்டு மகிழ்ந்து இறுதியில் மகிழ்ச்சியோடு விடைபெற்றுச் சென்றனர்.

அத்துடன் சபையோரை மகிழ்விக்க நடனங்கள், பாடல் நிகழ்ச்சி, கர்நாடக இசைக் கச்சேரி, மற்றும் உடல் நலம் குன்றிய இளைய தலைமுறையினரின் பாடல் நிகழ்ச்சிகள் என பலவும் சபையோரை மகிழ்வித்தன.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் உதயன் சர்வதேச விருது விழாவின் ஸ்தாபகருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது உரையில் தமது உதயன் பத்திரிகையை வாராவாரம் அச்சில் கொண்டு வரும் பணி என்பது சவால்கள் நிறைந்ததாக உள்ளதாகவும் அதை தொடர்ச்சியாக மேற்கொள்ள மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்கள் தரும் ஆதரவிற்கு நன்றி தெவித்தார். அத்துடன் உதயன் பத்திரிகை நிறுத்தப்பட்டால் சாதனையாளர்களை கௌரவிக்கும் விருது விழாவையும் தொடர்ந்து நடத்த இயலாமல் போய்விடும் என்ற தனது ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

மேற்படி உதயன் சர்வதேச விருது விழா மேடையில் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களின் சேவைகளைப் பாராட்டும் வகையிலும் கௌரவிக்கும் வகையிலும் பிரிட்டிஸ் மன்னரின் முடிசூட்டு விழாப் பதக்கமும் சான்றிதழும் கௌரவ ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சர் றேமண்ட் சோ அவர்களால் வழங்கப்பெற்றது.

அத்துடன், கனடாவில் அமையவிருக்கும் தமிழர் சமூக மையத்தின் கட்டட நிதிக்காக பலரும் வழங்கியது போன்று லோகேந்திரலிங்கத்தின் குடும்பம் மற்றும் அவரது பிள்ளைகள், மருமக்கள் ஆகியோர் சார்பில் பத்தாயிரம் டாலர்களுக்குரிய காசோலையும் தமிழர் சமூக மையத்தின் நிதிக்குழுத் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பெற்றது.




































செய்தி: சத்தியன்

**படங்கள்: ரகு மற்றும் GTA கெங்கா - சைலோன் பாலன் மற்றும் Behind Me Media Group Inc ஆகியோர்**



கோண்வோல் சிவன் ஆலயம் - கனடா
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
தெய்வத் திரு. சண்முகலிங்கம் வேலாயுதபிள்ளையின் ஆசீர்வாதத்துடன்
மஹோற்சவ விஞ்ஞாபனம் 2025
15 யூலை 2025 முதல் 26 யூலை 2025 வரை
கொடியேற்றம் 15.07.2025 செவ்வாய்க்கிழமை
சப்பிரத் திருவிழா 22.07.2025 செவ்வாய்க்கிழமை
தேர்த் திருவிழா 23.07.2025 புதன்கிழமை
தீர்த்தத் திருவிழா 24.07.2025 வியாழக்கிழமை
பூங்காவனம் 25.07.2025 வெள்ளிக்கிழமை
வைரவர் மடை 26.07.2025 சனிக்கிழமை
தேர்த் திருவிழாவிற்கு
Toronto,mississauga, Brampton வில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறவுள்ளதால்
முற்பதிவிற்கு அழையுங்கள் ( கட்டணம் இருவழிச்சேவைக்கு $20)
416-564-9642
www.cornwallshivan.ca
1730 Vincent Massey Dr, Cornwall, ON K6H 5R6
CORNWALL SHIVAN TEMPLE CANADA


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் இலங்கை "வீரகேசரி"யின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனின் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் மற்றும் தமிழ்க் கவிஞர்கள் கழக உறுப்பினர்கள்

கனடாவில் நடைபெற்ற "உதயன்" சர்வதேச விருது விழாவில் "வாழ்நாள் சாதனையாளர் விருது - இலங்கை" என்னும் உயர் கௌரவத்தைப் பெறுவதற்காக கனடா வந்திருந்த இலங்கை வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் வாழ்த்துக்கள் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான நிலையில் ஸ்ரீகஜன் அவர்களுக்கு வரவேற்பு உபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் மற்றும் கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம் ஆகியவற்றின் முக்கிய உறுப்பினர்கள் திங்கட்கிழமையன்று 17ம் திகதி அன்றைய அவரது பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டி ஸ்ரீகஜன் அவர்களது பிறந்தநாளையும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் ரவி கனகசபை மற்றும் கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகத்தின் தலைவர் குமரகுரு கணபதிப்பிள்ளை ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பாராட்டு வைபவத்தில் கனடா வாழ் எழுத்தாளர்கள்







மற்றும் கவிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விருந்துண்டு பாராட்டுரை வழங்கி மகிழ்ந்தனர். இலங்கை வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அதனைக் கொண்டாடிய இலக்கிய நண்பர்கள் என்ற வகையில் அனைவரும் மகிழ்ச்சியோடு தங்கள் பரவசத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

அவர்கள் அனைவருக்கும் ஸ்ரீகஜன் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.




# முன்னாள் "இலங்கை போக்குவரத்துச் சபை" ஊழியர்கள் சங்கம் – கனடா நடத்திய வருடாந்த ஒன்றுகூடல்

கனடாவில் கடந்த 20 வருடங்களாக இயங்கிவரும் முன்னாள் "இலங்கை போக்குவரத்துச் சபை" ஊழியர்கள் சங்கம் நடத்திய 2025 ஆண்டிற்குரிய வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 15-06-2025 ஞாயிற்றுக்கிழமையன்று மதியம் தொடக்கம் மாலை வரை ஸ்காபுறோ நீல்சன் பூங்கா வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி வருடாந்த ஒன்றுகூடலை சிறப்பாக நடத்துவதற்கு சங்கத்தின் தலைவர் திரு. கௌரிநாதன், செயலாளர், எஸ். தவகுலதாசலிங்கம். உபு செயலாளர் வ.சுகுமார் உட்பட அனைத்து உறுப்பினர்களும் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.









மேற்படி வருடாந்த ஒன்றுகூடலுக்கு இலங்கையின் பிரபல தேசிய நாளிதழான "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ச. ஸ்ரீகஜன் அவர்கள் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பெற்றிருந்தனர்.

மேலும் கல்விச் சபை உறுப்பினர் நீதன் சண்முகரா அவர்களும் அங்கு விசேட விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்தார்.

தலைவர் கௌரிநாதன், அவர்கள் அங்கு உரையாற்றும் போது தங்கள் சங்கம் கனடாவிலும் தாயகத்திலும் ஆற்றிவரும் உதவிகள் தொடர்பாக அங்கு விபரங்க்ளைத் தந்தார்.

அத்துடன் தங்கள் வருடாந்த ஒன்று கூடல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் தங்கள் உறுப்பினர்களை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் பாராட்டி வரவேற்பதாகவும் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பாக ஒன்று கூடலை நடத்த தீர்மானித்துள்ளதாவும் தெரிவித்தார்.



# கனடாவில் கோடைகாலம்
## (நேரிசை ஆசிரியப்பா)

---------------------------

*கோடையும் வந்திடக் கோலமும் மாறிடும்*
*வாடையும் தந்தது வசந்த காலம்*
*பேடையும் துணையும் பாடிக் களிக்கும்*
*தோடையில் காய்த்துத் தொங்கிடும் பழங்கள்*
*மொட்டை மரங்கள் முகையைக் காட்டும்*
*விட்ட இடத்தில் வேலைகள் தொடங்கும்*
*வெட்ட வெளிகள் விளைச்சல் காணும்*
*சிட்டுக் குருவிகள் சிறுகூடு கட்டும்*
*மந்தைகள் கூடியே மகிழ்வாய் மேயுமே!*
*பந்துக்கள் சேர்ந்து பகிர்ந்து உண்பர்*
*கந்தன் கோவிலிற் கார்த்திகைத் திருவிழா*
*சந்தைத் திடலில் சங்கீதப் பெருவிழா*
*திருமணச் சடங்கைத் சிறப்பாய் நடத்தினர்*
*வருமானக் கணக்கை விரைந்தே கேட்டனர்*
*வருண பகவான் வாரியே வழங்க*
*அருவிகள் எல்லாம் ஆட்டம் போட்டன*
*பூங்கா எல்லாம் பொலிவு பெற்றே!*
*ஆங்கே மரங்களில் அரும்புகள் தோன்றின*
*தாங்காக் காங்கை தகிர்த்த போதும்*
*பாங்காய்ப் பட்சணம் பகிர்ந்து உண்டோம்*
*ஊடகங்கள் கொண்டாட்டம் ஊர்மெச்ச நடந்திட*
*ஆடவரும் பெண்களும் ஆர்வமாய் கூடினர்*
*பாடகர் வந்தனர் பாரதம் இருந்தே*
*பாட சாலையில் பணிகளும் நின்றதே!*
*தப்பாது வந்தது தக்க சமயம்*
*எப்போ வருமென ஏங்கியே நின்றோம்*
*அப்போ கிடைத்த அரும்வாய்ப்பு*
*இப்போ நினைக்கவும் இதயத்தில் இனிக்குதே!*

---------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

(11 பக்கம் தொடர்ச்சி)

## நீதியைத் தேடிக் கொள்வதற்கான புறக்கணிக்க முடியாத ஒரு சந்தர்ப்பம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியாகும்

1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ராஜபக்ஷ யாழ்ப்பாண நீதிமனறத்தில் முன்னிறுத்தப்பட்டார். நீதவான் யாழ்ப்பாணத்திலிருந்து 150 மைல் தொலைவிலுள்ள மன்னார் பகுதியிலிருந்து விமானம் மூலம் அழைக்கப்பட்டிருந்தார். அதன் போது இராணுவத்தினரால் விசாரணைக்காக மக்களை தடுத்து வைத்தல், சித்திரவதை மற்றும் படுகொலை செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதவான் முன்னிலையில் மிக நீண்ட வாக்குமூலம் ஒன்றை வழங்கிய சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்தார். உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் மாத்திரமே தாம் அந்த உடல்களை புதைத்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சித்திரவதை செய்தல் மற்றும் கொலைகளுடன் தொடர்புடைய உயர் இராணுவ அதிகாரிகள் சிலரின் பெயரை அவர் குறிப்பிட்டிருந்தார். தான் உட்பட குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள்ளுக்கு அவ்வாறான 16 இடங்களை அடையாளம் காட்ட முடியும் என்று குறிப்பிட்டிருந்தார். செம்மணிக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் அங்கே அவரால் புதைக்கப்பட்ட ஒரு இடத்தை அடையாளம் காட்டினார். 1996 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இரானுவத்திரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன யாழ்ப்பாணத்தில் வாகனம் திருத்தும் இடம் ஒன்றில் பணியாற்றிய இருவரின் எலும்புகள் அங்கே கண்டுபிடிக்கப்பட்டன.

ராஜபக்ஷ யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முன்வைத்த தினத்தில் வெளியிட்ட இலங்கை இராணுவம் மேற்கொண்டதாக சொல்லப்படும் மனிதப் படுகொலைகள், காணாமல் ஆக்கப்படல் தொடர்பான பாரிய மனிதப் புதைகுழிகள் அகழ்வு நடைபெறும் இடம் ஊடகவியலாளர்களுக்கு திறந்து விடப்பட்டது. 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தினால் அந்தச் சந்தர்ப்பம் ஏற்பாடு செய்யப்பட்டது. விமானப் படை விமானம் ஒன்றின் மூலம் 40 ஊடகவியலாளர்களில் ஒருவரான பிரியதர்ஷன மதவத்த அவர்கள் உலக சோஷலிஸ இணையதளத்திற்கு விளக்கமான அறிக்கை ஒன்றை வழங்கியிருந்தார்.

செம்மணி பாரிய மனிதப் புதைகுழியைக் காண்பிப்பதற்கு முன்னர் சோமரத்ன ராஜபக்ஷ யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஒரு மணித்தியாலமளவில் சாட்சியம் வழங்கினார் என்று மெதவத்த குறிப்பிடுகிறார்.

“அவருக்குள் ஓரளவு மன அழுத்தம் இருந்ததை அவதானிக்க முடிந்ததாலும், அவர் மிகுந்த நம்பிக்கையுடன் பின்வருமாறு குறிப்பிட்டார்.” அரியாலையில் மக்களைக் கைது செய்து, அவர்களை சித்திரவதை செய்து, கொலை செய்த முறையை உங்களுக்குக் காட்ட முடியும். “நான் அரியாலை இராணுவ முகாமில் சிவில் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டேன். குடும்பங்களின் பெயர் மற்றும் முகவரிகளைப் பதிவு செய்தல் மற்றும் பயங்கரவாதிகளாக சந்தேகப்பட்டு முகாம்களுக்குக் கொண்டுவரப்படும் இளைஞர்களின் பெயர்களை ஆவணப்படுத்தல் என்னுடைய பணியாக இருந்தது. இதற்காக நாங்கள் இரண்டு பட்டியல்களைத் தயார் செய்தோம். இந்தப் பிரதேசம் அன்று இராணுவ நிர்வாகத்தை கொண்டு நடத்துவதற்காக பொறுப்பான முகாம்கள் தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் (UTHR) மூலம் 1999 ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிட்ட விசேட அறிக்கை முக்கியத்துவம் மிக்கதாகும்.

“1996 செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி கிருஷாந்தி கொலை நிகழ்ந்ததாக நாம் உறுதியாக உணரும் சூழ்நிலைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். கொலை நடைபெற்ற செம்மணியானது யாழ்ப்பாண நகரிற்கு கிழக்குத் திசையில் உள்ள பிரதான முகாமான புங்கன்குளம் இராணுவ முகாமின் கட்டுப்பாட்டில் இருந்தது. பாரிய பிரதேசம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர்கள் முதலில் புங்கன்குளம் முகாமிற்கு அழைத்து வரப்பட்டதுடன், அங்கு அவர்கள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் அநேகமானோர் செம்மணிக்கு அருகில் உள்ள அரியாலை கிழக்கு புலனாய்வு முகாமிற்கு அனுப்பப்பட்டனர். ஒட்டு மொத்தமாக அது குடியிருப்புக்கள் இல்லாத பிரதேசமாகும். அங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு பல்வேறு கொடுமைகள் இழைக்கப்பட்டதுடன் அதிலிருந்து உயிர் தப்பியவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

“செம்மணி வீதித் தடையில் இருந்த இராணுவச் சிப்பாய்களுக்கு இரவு அறிவித்தல் வழங்கப்படும். புலனாய்வு முகாமில் கொடுமைகள் இழைக்கப்பட்டு கொலை செய்யப்பட கைதிகளின் நிர்வாணப்படுத்தப்பட்ட உடல்கள் பின்னர் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு செம்மணிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கேயிருக்கும் சிப்பாய்களின் உதவியுடன் புதைக்கப்படும். கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் பின்னணியில் உள்ள இந்த சூழ்நிலைகளை யாராலும் கிழித்தெறிய முடியாத மெல்லிய திரையின் பின்னால் மறைந்து எம்மைப் பார்த்துக் கொண்டுள்ளது. பிரதிவாதியின் சட்டத்தரணிகள் விசாரணையில் பங்குகொண்ட சிப்பாய்களின் சாட்சியத்திற்கு இடையூறு ஏற்படுத்தி இறுதி வரை காத்திருக்குமாறு கட்டாயப்படுத்தினர்”.

புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரது பட்டியலின் அடிப்படையில் அவர்களின் வீடுகளை அடையாளம் காட்டுவதற்காக பிரதேசம் தொடர்பில் இருந்த அறிவின் அடிப்படையில் தானும் பங்குபற்றியதாகவும், அதன் பின்னர் சிப்பாய்கள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு அவர்களைக் கைது செய்த கொண்டு வந்த சாக்குப் பைகளில் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களை ஏனைய நபர்களில் இருந்து வேறுபடுத்திக் கொண்டாதாகவும் கோப்ரல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை அழைத்து வந்த அதிகாரிகளாக மேஜர் ஜெனரல்களான வீரக்க்கொடி மற்றும் குணசேகர ஆகிய இருவரைப் பெயரிட்டுள்ளார். அதன் பின்னர் இனங்காணப்பட்ட இளைஞர்கள் முகாம்களுக்கும், வேறு தடுத்து வைத்தல் முகாம்களுக்கும் கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டியல் பெற்றுக்கொடுத்தவர்களாக லெப்டினன் விஜேசிறிவர்தன மற்றும் கப்டன் லலித் ஹேவா ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். சாதாரண தமிழ் இளைஞர்கள் மாத்திரமல்லாது, அரசின் உயர் அதிகாரிகள் சிலர் கூட கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட சந்தர்ப்பங்களும் இருந்துள்ளன என அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொடுமைகளுக்கு ஆளாக்குதல், கொலை செய்தல், பாலியல் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பிலும் சோமரத்ன ராஜபக்ஷ, நீதவான் முன்னிலையில் கூறிய விடயங்களும் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ராஜபக்ஷவை முதன்முதலில் பார்த்ததாக எழுதும் ஊடகவியலாளர் மெதவத்த தனது அறிக்கையில், சோமரத்ன ராஜபக்ஷ இராணுவப் படிநிலையை கடுமையாகக் கண்டித்ததாகவும், எந்தத் தயக்கமும் இல்லாமல் இராணுவ அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்ட தாகவும், அவர்கள் செய்த குற்றங்கள் குறித்து விரிவான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாகவும் வலியுறுத்துகிறார்.

“செம்மணி புதைகுழி அமைந்துள்ள பிரதேசத்தில் உடல்கள் வைக்கப்பட்ட 10 இடங்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும். என்னுடன் குற்றம் சாட்டப்பட்டுள்ள மற்றைய நான்கு பேரினாலும் இன்னும் ஆறு இடங்களைக் காட்ட முடியும். கிருஷாந்தி குமாரசாமியைக் கொலை செய்ததாக என் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும், நான் அதைச் செய்யவில்லை. அவளின் சடலத்தைப் புதைக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டார்கள். எனினும் அப்போது நான் புதைத்தது கிருஷாந்தியின் சடலமென நான் அறிந்திருக்கவில்லை” என்று ராஜபக்ஷ தெரிவித்ததாக ஊகடவியலாலராக மெதவத்த குறிப்பிட்டுள்ளார்.

“கிருஷாந்தி குமாரசாமி கொலை தொடர்பில் பொய்யாக என்னைக் குற்றவாளியாக்கியுள்ளமையினால் இந்த விடயத்தை வெளிக்கொண்டு வர நான் முன்வந்தேன். நான் அவளைக் கொள்ளவில்லை. உயர் நீதிமன்ற விசாரணையில் நான் வழங்கிய வாக்குமூலத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறும் இல்லாவிடின் எம் அனைவரையும் அழித்தொழிப்பதாகவும் எச்சரிக்கை விடுக்கும் வகையில் எனக்கும் என் குடும்பத்தினருக்கும் கடிதங்கள் சில கிடைத்திருக்கின்றன. இந்தக் குற்றத்தைச் செய்த இராணுவத்தினர் என்னைக் குற்றவாளியாக குற்றம் சுமத்தி தப்பித்துக்கொள்வதற்கு முயற்சி செய்கிறார்கள். நான் இந்த வாக்குமூலத்தை வழங்குவது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காகவோ அல்லது இராணுவத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் நோக்கத்திலோ அல்ல. எனக்கு நடந்த அநியாயம் காரணமாகவே நான் இதைச் செய்கிறேன். இந்த நாட்டின் நீதிமன்றத்தால் எனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால், நியாயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கும் நான் தயார்” என சோமரத்ன ராஜபக்ஷ நீதவான் முன்னிலையில் வழங்கிய வாக்குமூலத்தை இராணுவத்தின் நிலையை மேலும் வெளிக்கொண்டு வந்து நிறைவு செய்ததாக ஊடகவியலாளர் மெதவத்த குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ கட்டுப்பாட்டு அச்சத்தினிடையே செம்மணி படுகொலைகளை வெளிக்கொண்டு வருவதற்கு கடும் முயற்சி செய்தவர் கிருஷாந்தியின் நண்பியான தமயந்தியின் தந்தையான எஸ்.டி. கணநாதன் ஆவார். யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த 64 வயதுடைய கணநாதன் மாம்பழம் இராணுவ முகாமிற்கு 200 மீற்றர் தொலைவில் உள்ள புங்கன்குளத்தில் தன்னுடைய வீட்டின் அருகிலுள்ள கிணறு ஒன்றில் நீர் எடுக்கச் செல்லும் போது துப்பாக்கிதாரிகளினால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

### வீணாவின் கவிக்கணை

பிறப்பும் இறப்பும்
இயற்கையின் சித்தம்,
அதற்கிடையில்,
இன்பமாய் வாழ்வதோ
வெறுமையாய் போவதோ
உன் விருப்பம்,
ஒரு முறை தான்
வாழ்க்கை என்றால்
அதை உன் விருப்பத்திற்கு
இனிதாய் வாழ்ந்து
தான் பார்த்திடேன்.

# “சைக்கிள் தமிழ்த் தேசியத்தோடு . . . வீடு எதிரிகள் மற்றும் துரோகிகளோடு”



***“இலங்கையின் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல கம்யூனிசத்தை எதிர்க்க எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என அறிவித்தார். அதேபோன்று தமிழ் மக்களுக்கு எதிரான போரில் வெற்றிபெற எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அறிவித்தார். அதே வழியில்தான் தமிழ் தேசியத்தை அழிக்க எந்தப் பேயுடனும் எதிரிகள், துரோகிகளோடும் கூட்டுச்சேரத் தயார் என்கின்றனர் தமிழரசின் அரசியல் சூதாடிகள்”***

**-------------------------------------------------- - கே. பாலா ----**

**ந**டந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் பேரினவாதத்திடம் அடகு வைக்கப்பட்ட “வடக்கின் தமிழ் தேசியம்” உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தவறை உணர்ந்த தமிழ் மக்களினால் மீட்கப்பட்ட நிலையில் தற்போது வடக்கிலுள்ள குறிப்பாக யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி அதிகாரத்திற்காக தமிழரசுக்கட்சியிலுள்ள சில அரசியல் சூதாடிகளினால் மீண்டும் பேரினவாதிகளிடமும் எதிரிகளிடமும் துரோகிகளிடமும் “வடக்கின் தமிழ் தேசியம்” அடகு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக்கட்சிகளின் தாய்கட்சி எனப் போற்றப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியே வடக்கின் தலைநகரான யாழ்ப்பாண மாநகரத்தின் ஆட்சியை, மேயர், பிரதி மேயர் பதவிகளை தாங்களே கைப்பற்ற வேண்டுமென்ற அதிகார ஆசையினால் ஏனைய தமிழ் தேசியக்கட்சிகளின் ஆதரவை புறக்கணித்து, அவர்களின் சில நிபந்தனைகளை பூதாகரமாக்கி நிராகரித்து விட்டு பேரினவாதிகளினதும் துரோகிகளினதும் ஆதரவோடு யாழ் மாநகர சபையின் ஆட்சியை கைப்பற்றியே மீண்டும் தமிழ் தேசியத்தை அடகு வைத்துள்ளனர்.

பேரினவாதக் கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, தமிழினத் துரோகி என இவர்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றே தமிழரசுக்கட்சி கட்சி மிகப்பெரும் காட்டிக்கொடுப்பையும் துரோகத்தனத்தையும் தமிழ் தேசியத்திற்கும் தமிழினத்திற்கும் செய்துள்ளது.

வடக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றவர்கள் ஆட்சியமைக்க நாம் ஆதரவளிப்போம் அதேவேளை இரண்டாவது இடத்தில் நாம் இருந்தால் எமக்கு பிரதி மேயர், அல்லது பிரதி தவிசாளர் பதவி தரவேண்டும் என்ற நிபந்தனையை கஜேந்திரகுமார் பொன்னம்மபலம் தலைமையிலான தமிழ் தேசிய பேரவை-தமிழ் தேசிய மக்கள் முன்னணி வைத்திருந்தது. அத்துடன் ஒரு சில சபைகளில் தமக்கு பிரதி தவிசாளர் பதவி வேண்டுமென ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் (சங்கு) கோரியிருந்தது. இது தொடர்பில் தமிழரசுடன் பேச்சுகளும் நடத்தப்பட்டன.

ஆனால் யாழ் மாநகரசபையை ஏனைய தமிழ் தேசியக்கட்சிகளின் எந்தவொரு ஆதரவுமின்றி முழுமையாக கைப்பற்ற தமிழரசின் அரசியல் சூதாடிகள் திட்டமிட்டனர். அதனால் அவர்களை நிராகரித்து விட்டு ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானந்தாவிடம் தமிழரசு சரணாகதி அடைந்தது. அத்துடன் பேரினவாதக் கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றினுடனும் இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டு ஆதரவு கோரியது.

யாழ் மாநகரசபையில் மொத்தமாக 45 ஆசனங்கள் உள்ளன. இந்நிலையில் 2025 மே 6 இல் நடைபெற்ற இலங்கை உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி, 10370, வாக்குகள் பெற்று 13, ஆசனங்களையும் தமிழ் தேசிய பேரவை-தமிழ் தேசிய மக்கள் முன்னணி 9124, வாக்குகள் பெற்று -12, ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி.7702, வாக்குகள் பெற்று-10 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, 3567 வாக்குகள் பெற்று-4, ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி, 3076, வாக்குகள் பெற்று 4 ஆசனங்களையும் ஐக்கியதேசிய கட்சி, 587 வாக்குகள் பெற்று 1 ஆசனத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி, 464, வாக்குகள் பெற்று 1 ஆசனத்தையும் பெற்றிருந்தன. யாழ் மாநகரசபையில் ஆட்சியமைக்கும் கட்சி 23 ஆசனங்களை பெறவேண்டும்.

இவ்வாறான நிலையில் யாழ் மாநகரசபையின் மேயர் தெரிவுக்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் தமிழரசுக்கட்சி மேயர் வேட்பாளராக நிறுத்திய மதிவதனி விவேகானந்தராஜா 19 வாக்குகளைப் பெற்று யாழ்.மாநகர சபையின் மேயராக தெரிவு செய்யப்பட்டார். தமிழரசுக்கட்சி 13 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் ஈ.பி.டி.பி.யின் 4 ஆசனங்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் 1 ஆசனம், ஐக்கியதேசியக்கட்சியின் 1 ஆசனம் என்பவற்றை பெற்றே 19 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. எனினும் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க 23 ஆசனங்கள் தேவையென்பதனால் யாழ் மாநகரசபையில் சிறுபான்மை ஆதரவுடனேயே தமிழரசு ஆட்சியமைத்துள்ளது.

அதேவேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிறுத்திய மேயர் வேட்பாளர் -தமிழ் மக்கள் பேரவை-தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 12 ஆசனங்கள், ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டணியின் 4 ஆசனங்களுடன் 16 ஆசனங்களைப் பெற்றிருந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசியமக்கள் சக்தி 10 ஆசனங்களுடன் நடு நிலை வகித்தது. தமிழ் தேசியத்தை கைவிட்டு மேயர் பதவியை பெற கஜேந்திரகுமார் விரும்பியிருந்தால் தேசிய மக்கள் சக்தியின் 10 ஆசனங்கள் ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டணியின் 4 ஆசனங்களைப் பெற்று 26 ஆசனங்களுடன் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்திருக்க முடியும். ஆனால் அவர் தமிழ் தேசியக் கொள்கைக்காக அதனை செய்யவில்லை.

ஆனால் ஈ.பி.டி.பி., ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்க மறுத்திருந்தால் தமிழரசின் அரசியல் சூதாடிகள் நிச்சயம் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவைக் கோரியிருப்பார்கள். ஏனெனில் தமிழரசுக்கட்சிக்கு தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் எதிரிகளே தவிர பேரினவாதக் கட்சிகளோ துரோகிக் கட்சிகளோ எதிரிகள் கிடையாது. தமிழரசின் தலைமைகள் எப்போதும் பேரினவாத கட்சிகளின் தலைவர்கள், எஜமானர்களின் விசுவாசிகளாக, அடிமைகளாகவே இருந்து வந்துள்ளனர். அதன் இறுதி உதாரணமாக நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக தமிழ் தேசியக்கட்சிகள் அரியநேத்திரனை நிறுத்தியபோது அவரை தோற்கடிக்க முழு மூச்சாக இந்த அரசியல் சூதாடிகள் செயற்பட்டதுடன் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாதெனவும் கூறியதுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவையே பகிரங்கமாகவே ஆதரித்திருந்தார்கள்.

இவ்வாறாக யாழ் மாநகரசபையை எதிரிகளோடும் துரோகிகளோடும் சேர்ந்து கைப்பற்றிய தமிழரசின் அரசியல் சூதாடிகள் இங்கு தமக்கு போட்டியாக வேட்பாளரை நிறுத்திய தமிழ் மக்கள் பேரவை-தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட சாவகச்சேரி நகரசபையிலும் ஆட்சியைக் கைப்பற்ற சகுனித்தனமாக அக்கட்சியின் இரு வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து அவர்களுக்கு எதிராக இடைக்காலத்தடை உத்தரவைப் பெற்று வாக்களிப்பில் பங்கேற்க விடாது செய்து அதிகாரத்தை கைப்பற்ற சதி செய்தது.

சாவகச்சேரி நகர சபையில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி 6 ஆசனங்களையும் தமிழரசுக் கட்சி 6 ஆசனங்களையும் பெற்றிருந்தன. வாக்குகள் அடிப்படையில் தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி 2,959 வாக்குகளையும் தமிழரசுத் தரப்பு 2,594 வாக்குகளையும் பெற்றன. இதன்படியே தமிழ் மக்கள் பேரவை - தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னிலை வகித்தது. இச்சபையில், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (சங்கு) இரு ஆசனங்களையும் ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இந்நிலையில் தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் கொள்கை ரீதியில் ஒப்பந்தம் செய்து ஓரணியாகி தமது ஆசனங்களின் எண்ணிக்கையை 8ஆக அதிகரித்தது. இதேவேளை, தமிழரசுக் கட்சி ஈ.பி.டி.பியிடம் ஆட்சியைக் கைப்பற்ற ஆதரவைக் கோரியிருந்தது. இந்நிலையில், தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வசம் 8 ஆசனங்களும் தமிழரசு - ஈ.பி.டி.பி வசம் 7 ஆசனங்களும் இருந்தன.தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களுடன் நடு நிலை வகித்தது.

தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி,ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஓர் ஆசனத்தால் முன்னிலை வகித்த நிலையில்தான் இவர்களை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றவேண்டுமென்ற அதிகார ஆசை மற்றும் பழிவாங்கும் வெறியில் அவசர அவசரமாக 11 ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சபை உறுப்பினர் ஒருவருக்கு எதிராக தமிழரசுக்கட்சியின் அரசியல் சூதாடிகளினால் வழக்குப் போடப்பட்டது.

13ஆம் திகதி மாலை சபை கூடவிருந்த நிலையில், அன்று காலை அந்த உறுப்பினருக்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டது. இதனால், தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 7ஆகக் குறைந்தது.தமிழரசு - ஈ.பி.டி.பி தரப்புக்கும் ஆசனங்கள் 7ஆக இருந்தன. இதற்கிடையில் ஏற்கனவே, தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி தரப்பின் மற்றொரு பெண் உறுப்பினரை சபைக்குப் போகக்கூடாது என்று தமிழரசின் கைக்கூலிகள் தொலைபேசி மூலம் வெளிநாட்டில் உள்ள குறித்த உறுப்பினரின் மகனுக்கும் உறுப்பினருக்கும் பலதடவைகள் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தகவல்கள் உண்டு. அவரையும் சபைக்கு வரவிடாமல் தடுத்து தமிழரசு - ஈ.பி.டி.பி. தரப்பு 7:6 என்ற ஆசனங்கள் அடிப்படையில் சபையைக் கைப்பற்றுவதே சதித் திட்டமாகவிருந்தது.

ஆனாலும் அந்த பெண் உறுப்பினர் சபைக்கு வந்துவிட்டார். இந்நிலையில், தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி தரப்புக்கும் தமிழரசு - ஈ.பி.டி.பி. தரப்புக்குமிடையில் தவிசாளர் - உப தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நடைபெற்ற போது இரு தரப்புகளும் தலா 7 வாக்குகளைப் பெற்று சமநிலை பெற்றன.இதனால் திருவுளச்சீட்டு (குலுக்கல்முறை) முறை மூலம் இரு பதவிகளுக்கும் தெரிவு இடம்பெற்றது இரு தடவைகளும் தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு வெற்றி கிடைத்தது. இதற்கமைய தமிழரசின் சதியை, சகுனித்தனத்தை அதிர்ஷ்டத்தின் மூலம் முறியடித்து சாவகச்சேரி நகர சபையை தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றியது.

இலங்கையின் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல கம்யூனிசத்தை எதிர்க்க எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என அறிவித்தார். அதேபோன்று தமிழ் மக்களுக்கு எதிரான போரில் வெற்றிபெற எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அறிவித்தார். அதே வழியில்தான் தமிழ் தேசியத்தை அழிக்க எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என்கின்றனர் தமிழரசின் அரசியல் சூதாடிகள். உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு பிரசாரங்கள் சூடிபிடித்தபோது “நாடு அநுரவோடு ஊர் எங்களோடு” என்றார் தமிழரசின் தலைவர் ஒருவர். ஆனால் இன்று “சைக்கிள் தமிழ் தேசியத்தோடு ...வீடு எதிரிகள், தூரோகிகளோடு” என்றும் “நாடு அநுரவோடு ...வீடு வீணையோடு” என்றும் தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் சௌத்பார் கடற்கரையோரங்களில் கரை ஒதுங்கியுள்ள ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் மூலப்பொருட்கள்



- எஸ்.ஆர்.லெம்பேட் (13-06-2025)

மன்னார் மாவட்டத்தில் சௌத்பார் தொடக்கம் தாழ்வுபாடு உட்பட பல்வேறு கடற்கரையோர பகுதிகளில் நுண்ணிய பிளாஸ்டிக் போன்ற சிறிய அளவிலான உருண்டைகள் இலட்சக்கணக்கில் கரை ஒதுங்கியுள்ளன.

முன்னதாக இலங்கை கடற்பரப்பில் பற்றியெறிந்த எவர் கிறீன் கப்பலில் இருந்து வெளியேறிய அதே போன்ற வடிவமுடைய பொருளே மேற்படி தொடர்ச்சியாக கரையொதுங்கி வருகிறது.

இவ்வாறான பின்னனியின் 13ம் திகதி அன்றையதினம் வெள்ளிக்கிழமை (3) கரையோர காவல் திணைக்களம், கடற்படை, ராணுவம் இணைந்து முதற்கட்டமாக கடற்கரை ஓரங்களில் ஒதுங்கியுள்ள குறித்த பிளாஸ்டிக் பொருட்களை அகற்றியுள்ளனர்.

குறிப்பாக கடற்கரையோரங்களில் இலட்சக்கணக்கில் இவ்வாறான ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நுண்ணிய பொருட்கள் காணப்படுகின்ற மையினால் முழுமையாக குறித்த பொருட்களை அகற்ற முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மன்னார் மடு பகுதியில் பேருந்தில் வைத்து பாடசாலை மாணவி மீது ராணுவ சிப்பாய் பாலியல் சேட்டை



(18-06-2025)

மன்னார் மடு பிரதேசத்தில் இருந்து முருங்கன் பகுதியில் உள்ள பாடசாலைக்கு அரச பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவி மீது அப்பேருந்தில் பயணித்த ராணுவ சிப்பாய் ஒருவர் பாலியல் சேட்டை மேற்கொண்ட நிலையில், குறித்த சிப்பாயை முருங்கன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

18ம் திகதி அன்று புதன்கிழமை காலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவி மடு பகுதியில் இருந்து அரச பேருந்தில் பாடசாலைக்கு பயணித்துக் கொண்டிருந்த நிலையில் குறித்த பேருந்தில் பயணித்த ராணுவ சிப்பாய் குறித்த மாணவிக்கு பாலியல் சேட்டை புரிந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவி முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் முருங்கன் பொலிஸார் இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அதி கூடிய ஆசனங்கள் பெற்று சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்கிறார் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்



- எஸ்.ஆர்.லெம்பேட் (18-06-2025)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் உள்ள சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு யாராக இருந்தாலும் ஆதரவு வழங்க வேண்டியது அவர்களின் தார்மீக கடமை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் புதன்கிழமை (18) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எந்த சபைகளில் அதி கூடிய ஆசனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதோ, அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என நாங்கள் கூறி இருந்தோம். இதனை ஒரு கோட்பாடாக நாங்கள் கூறி இருந்தோம்.

இத் தேர்தலில் மட்டும் இல்லை இதற்கு முன் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் கூறியிருந்தோம்.

பல கட்சிகள் இந்த கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர். எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் உள்ளதோ அந்த கட்சி ஆட்சியமைக்க ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோட்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவ்வாறு பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 35 சபைகளில் அதி கூடிய ஆசனங்கள் இருக்கின்றன.

அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும்.


இந்த கோட்பாட்டிற்கு இணங்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலே செயல்பட்டிருக்க வேண்டும்.

மக்கள் ஆணை வழங்கி விட்டார்கள்.எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்துள்ளதோ அந்த கட்சி ஆட்சி அமைக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1151

## (வரலாறும் மரபும்)

## தொண்டீசுவரம் மாத்தறை

இதிகாசங்களையும், புராணவரலாறுகளையும், தலபுராணங்களையும் ஆதாரமாகக்கொண்டு, வரலாறுகளை ஆய்வுசெய்யவேண்டிய நிலைக்கு இந்துசமயம் தள்ளப்பட்டுள்ளது. அந்தந்தக் காலங்களிலே படைக்கப்பட்ட இலக்கியங்கள், சமகால நிகழ்வுகளையும், இலக்கியங்கள் படைக்கப்பட்ட கால சமுதாயப் பின்னணிகளையும் அறிய உதவுகின்றன. இந்த ரீதியில் புராண, இதிகாச வரலாறுகளும் ஓரளவு வரலாற்று மூலங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றிலே வடக்கில் நகுலேசுவரமும், கிழக்கிலே திருக்கோணேசுவரமும். மேற்கிலே திருக்கேதீசுவரமும், முன்னேசுவரமும் காலத்திற்கேற்ற மாற்றங்களோடு காணப்படுகின்றன. இவற்றுள் முன்னேசுவரம் இராமரோடும், திருக்கேதீச்சரம் சூரபன்மனின் மனைவியாகிய பதுமகோமளை என்பவளுடைய பாட்டனாராகிய மகாதுவட்டா என்பவருடனும், திருக்கோணேசுவம் இராவணனுடனும், நகுலேசுவரம் அருச்சுனனுடனும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. ஐந்தாகவதாகக் கருதப்படும் தொண்டீசுவரத்தின் புராண இதிகாச வரலாறுகள், எத்தகைய புராண, இதிகாச கதாபாத்திரங்களோடு பின்னப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய முடியாதுள்ளது.

அன்னியர் வருகை மற்றும் உள்நாட்டுப்போர்கள் போன்றவற்றால் ஈழத்திலுள்ள ஆலயங்கள் அழிவதும், எழுவதுமாகக் காணப்பட்டன. இவ்வாறான நிலைக்கு பஞ்ச ஈஸ்வரங்களும் ஆட்பட்டன. ஆயினும் தொண்டீசுவரம் தவிர்ந்த ஏனைய நான்கு ஈசுவரங்களும் சிவாலயம் என்ற நிலையிலிருந்து மாற்றமடையவில்லை. ஆனால் மாத்தறை மாவட்டத்தின் தென்முனை அல்லது தேவேந்திரமுனையிலுள்ள தொண்டீசுவரத்தின் நிலை, காலகதியில் சிவாலயம் என்ற ஆதிநிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. அக்கால அரசியல் சூழ்நிலையால் தமிழ்மக்கள், தெற்கிலிருந்து வடக்கு. கிழக்கு, ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். இடம்பெயர்ந்த மக்கள் இந்துக்களாக விளங்கிய காரணத்தால், தமது வாழ்விடங்களில் அன்னியரால் அழிக்கப்பட்ட ஆலயங்களை, மீண்டும் மீண்டும் கட்டியெழுப்பினர். ஆனால் புகழ்பெற்ற தொண்டீசுவரம் ஆலயம், தெற்கிலே மாத்தறை மாவட்டத்திலே காணப்பட்டமையால், போத்துக்கிசரால் அழிக்கப்பட்ட பின்னர், இந்துத் தமிழர்களால் அதனைப் பேணுவதற்குரிய வாய்ப்பு ஏற்படவில்லை. ஆயினும் அப்பகுதியில் வாழ்ந்த சிங்களமக்கள், புகழ்பெற்ற அச்சிவன்கோயிலை விஷ்ணுகோயிலாக மாற்றி வழிபாடியற்றி வருகின்றனர். பஞ்ச ஈசுவரங்கள் எனப் போற்றப்படும் சிவாலயங்கள் யாவும் கடற்கரையை அண்மித்ததாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொண்டீசுவரம் வி'ணு கோயிலாக மாற்றம்பெற்றாலும், தொண்டீசுவரம் சிலாலயமாக விளங்கியது என்பதற்கு ஆதாரமாக ஆலயவளவிலே நந்தி காணப்படுகின்றது. இவ்வாலய சுற்றாடலில் அகழ்வாய்வின்போது சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக விஷ்ணு காணப்படுகின்றார். புத்தமதத்தோடு வி'ணு வழிபாடு தொடர்பான பல கதைகள் வழக்கிலுள்ளன.

இக்கோயிலில் தற்காலத்தில் பிள்ளையார், முருகன், வள்ளி, பத்தினி அம்மன் (கண்ணகி), வைரவர் ஆகியோருக்கு சந்நிதிகள் அமைந்துள்ளன. இவற்றோடு சமன் கோயில் என அழைக்கப்படும் சந்நிதியும் இங்கு காணப்படுகின்றது. சிவன் என்பது சமன் என மருவியிருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்து. இதற்கு ஆதாரமாக சிவனொளிபாதத்தை சிங்கள மக்கள் சமனலகந்த என அழைப்பது குறிப்பிடத்தக்கது. இறைசக்தி என்பது ஒன்றுதான். அதனை அவரவர் தன்மைக்கேற்ப பல்வேறு வடிவங்களில் வணங்குவது தொன்றுதொட்டுக் காணப்படும் மரபாகவே விளங்குகின்றது. இவ்வாறான நிலையில் கி.மு 543 ஆம் ஆண்டு விஜயனால் புனரமைக்கப்பட்டதாகக் கருதப்படும் தொண்டீசுவரம் அழியாது, இந்துசமயத்தின் மற்றொரு கூறாகிய வைணவ மதவழிபாட்டுத்தலமாக மாறி பேணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**வளரும்...**

---



# GBU-57 மாஸிவ் ஆர்டினன்ஸ் பென்ட்ரேட்டர் (MOP): அமெரிக்காவின் இறுதிப் பங்கர் பஸ்டர்







நவீன போரின் மாறிவரும் சூழலில், எதிரிகள் பெரும்பாலும் பலப்படுத்தப்பட்ட நிலத்தடி வசதிகளில் அடைக்கலம் புகுகின்றனர். இந்த சவாலை சமாளிக்க அமெரிக்க விமானப்படையின் ஆயுதக் களஞ்சியத்தில் உள்ள மிகவும் பயங்கரமான ஆயுதங்களில் ஒன்று GBU-57A/B மாஸிவ் ஆர்டினன்ஸ் பென்ட்ரேட்டர் (MOP) ஆகும். இது 13,600 கிலோ (30,000 பவுண்ட்) எடையுள்ள ஒரு குண்டு, இது பூமியில் உள்ள கடினமான மற்றும் ஆழமாக புதைக்கப்பட்ட இலக்குகளை அழிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. B-2 ஸ்பிரிட் ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானம் மூலம் வழங்கப்படும் MOP ஒரு குண்டு மட்டுமல்ல - இது ஒரு மூலோபாய தடுப்பு சின்னமாகும், அமெரிக்காவின் பாதுகாப்பான எதிரி தளங்களைக் கூட அச்சுறுத்தும் திறனை இது நிரூபிக்கிறது.

### அதன் தொழில்நுட்ப சிறப்புக்கள்:

GBU-57A/B மாஸிவ் ஆர்டினன்ஸ் பென்ட்ரேட்டர் (MOP) எனப்படும் இந்த குண்டு 30,000 பவுண்ட் (13.6 மெட்ரிக் டன்) எடையும், 20.5 அடி (6.2 மீட்டர்) நீளமும் கொண்டது. இதன் வெடிபொருள் 5,300 பவுண்ட் (2,400 கிலோ) உயர் வெடிபொருளாகும். இது 5,000 psi வலுவூட்டப்பட்ட கான்கிரீட்டில் 200 அடி (60 மீட்டர்) ஊடுருவும் திறன் கொண்டது. இதை B-2 ஸ்பிரிட் ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானம் முதன்மையாக விநியோகிக்கிறது (எதிர்காலத்தில் B-21 ரெய்டரும் பயன்படுத்தலாம்). இதன் வழிகாட்டல் அமைப்பு GPS-உதவி உள்ளமைவு வழிசெலுத்தல் (INS) ஆகும்.

### வடிவமைப்பு மற்றும் நோக்கம்:

GBU-57 கடினமான, ஆழமாக புதைக்கப்பட்ட இலக்குகளை ஊடுருவுவதற்காக குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் நிலத்தடி பங்கர்கள், கட்டளை மையங்கள், ஏவுகணை சிலோக்கள் மற்றும் அணு வசதிகள் ஆகியவை அடங்கும். இது ஒரு துல்லியமான வழிகாட்டப்பட்ட "பங்கர் பஸ்டர்", இது அதிவேக தாக்கங்களில் உயிர்பிழைத்து, பூமி மற்றும் கான்கிரீட்டின் மூலம் துளையிட்டு, பின்னர் வெடிக்கும் திறன் கொண்டது. இதன் நீண்ட, குறுகிய வடிவமைப்பு அடர்த்தியான உலோகக்கலவைகளால் ஆனது, இது இயக்க ஆற்றலை அதிகரிக்கிறது. இது ஒரு பரந்த பகுதியை "வெடிக்க" வடிவமைக்கப்படவில்லை, மாறாக ஒரு கடினமான இலக்கின் உள்ளே தாமதமான வெடிப்பை வழங்குகிறது.

### மூலோபாய பங்கு மற்றும் முக்கியத்துவம்:

MOP இன் முதன்மை பணி WMD (பரவலான அழிவு ஆயுதங்கள்) தொடர்பான இலக்குகளை அழிப்பதாகும் - குறிப்பாக அணு அல்லது வேதியல் வசதிகள், அவை மலைத் தொடர்களில் மறைக்கப்பட்டிருக்கலாம் அல்லது ஆழமாக புதைக்கப்பட்டிருக்கலாம். ஈரான் மற்றும் வட கொரியா போன்ற நாடுகள் இத்தகைய பலப்படுத்தப்பட்ட தளங்களைக் கட்டியதாக சந்தேகிக்கப்படுகிறது. MOP அமெரிக்காவிற்கு அந்த இலக்குகளை அச்சுறுத்துவதற்கான அணு-அல்லாத விருப்பத்தை வழங்குகிறது. GBU-57 இன் பிரம்மாண்டமான சக்தி மற்றும் துல்லியம் ஒரு மூலோபாய தடுப்பாக செயல்படுகிறது. எதிரிகளை நிலத்தடி பாதுகாப்பில் அதிக முதலீடு செய்யத் தடுக்கிறது. "எந்த பங்கரும் பாதுகாப்பானது அல்ல" என்பதை MOP உலகுக்கு உணர்த்துகிறது. இவ்வளவு பெரிய ஆயுதத்தை B-2 ஸ்பிரிட் போன்ற ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானங்கள் மட்டுமே சுமக்க முடியும். எதிரியின் பிரதேசத்திற்குள் கண்டறியப்படாமல் MOP ஐ வழங்க இது உகந்தது. எதிர்காலத்தில், B-21 ரெய்டர் விமானமும் MOP அல்லது அதன் மேம்பட்ட பதிப்பைப் பயன்படுத்தலாம்.

### பிற பாரிய குண்டுகளுடனான ஒப்பீடு:

GBU-57 MOP ஒரு பங்கர் ஊடுருவல் குண்டு, இது ~30,000 பவுண்ட் எடையுடன் B-2 ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானத்தால் விநியோகிக்கப்படுகிறது. இதன் இலக்கு நிலத்தடி பங்கர்கள். இதேபோன்ற GBU-43 MOAB ("எல்லா குண்டுகளின் தாய்") என்பது ~21,000 பவுண்ட் எடையுள்ள ஒரு பரப்பளவு வெடிப்பு குண்டு, இது C-130 போன்ற சரக்கு விமானங்களால் வீழ்த்தப்படுகிறது. இது மேற்பரப்பு படைகள்/வாகனங்களைத் தாக்குவதற்காக உருவாக்கப்பட்டது. MOAB ஒரு பெரிய வெடிப்பு ஆரையைக் கொண்டிருந்தாலும், MOP ஆழமான ஊடுருவலில் மேலோங்கியுள்ளது, இது மிகவும் மூலோபாயமான ஆயுவமாகும்.

### வளர்ச்சியும் வரலாறும் ன:

நார்த்ரோப் கிரும்மன் மற்றும் அமெரிக்க விமானப்படை இணைந்து MOP திட்டத்தை 2000களின் நடுப்பகுதியில் உருவாக்கின. எதிரிகள் தங்கள் மிக முக்கியமான சொத்துக்களை நிலத்தடியில் புதைத்ததாக உளவுத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து இது வேகமாக முன்னேற்றப்பட்டது. வைட் சாண்ட்ஸ் மிஸைல் ரேஞ்ச் (நியூ மெக்சிகோ) போன்ற இடங்களில் பல சோதனை வீழ்த்தல்கள் நடந்தன. MOP இப்போது செயல்பாட்டில் உள்ளது, ஆனால் இதுவரை போரில் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும், ஈரான் அல்லது வட கொரியா தொடர்பான சூழ்நிலைகளில் இது தயாராக உள்ளது.

### வரம்புகள் மற்றும் சவால்கள்:

MOP I B-2 போன்ற ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானங்கள் மட்டுமே சுமக்க முடியும், இது விநியோக வசதியை கட்டுப்படுத்துகிறது. இதன் ஆழமான வெடிப்பு அருகிலுள்ள உள்கட்டமைப்புகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். மேலும், MOP பயன்பாடு போர் மோதல்களை தீவிரப்படுத்தக்கூடும், ஏனெனில் இது ஒரு பெரிய மூலோபாய தாக்கமாக கருதப்படுகிறது.

### எதிர்காலம்: மற்றும் அதற்கு அப்பால்:

B-21 ரெய்டர் வரவிருக்கும் நிலையில், அதிநவீன ஊடுருவல் குண்டுகள் உருவாக்கப்படலாம். ஹைபர்சோனிக் பங்கர் பஸ்டர்கள், தானியங்கி துல்லிய குண்டுகள் மற்றும் டேண்டம் முனியே'ன்கள் (ஒன்று வெளிப்புறத்தைத் திறக்க, மற்றொன்று உள்ளே வெடிக்கும்) ஆராயப்படுகின்றன. எதிரிகள் பல அடுக்கு நிலத்தடி கோட்டைகளை கட்டும்போது, இத்தகைய தொழில்நுட்பங்கள் முக்கியமாகிவிடும்.

GBU-57 MOP என்பது இன்றைய காலத்தின் சிறந்த பங்கர்-பஸ்டர் ஆயுதம். இது இயக்க சக்தி மற்றும் துல்லிய வழிகாட்டலை இணைக்கிறது. போரில் பயன்படுத்தப்படாவிட்டாலும், இது ஒரு சக்திவாய்ந்த மூலோபாய ஆயுதமாக உள்ளது. நிலத்தடி பாதுகாப்புகள் மற்றும் அணு போரின் இந்த யுகத்தில், MOP ஒரு உண்மையை நினைவூட்டுகிறது - பூமிக்கு அடியில் நூறு அடி ஆழத்தில் கூட எந்த இலக்கும் பாதுகாப்பானது அல்ல.

**- ஈழத்து நிலவன் - (19-06-2025)**

# இவ்வார ராசிபலன்

**20-06-2025 வெள்ளி தொடக்கம் 26-06-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். புண்ணியம் சேரும். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். மனஅமைதி குறையும். திருமண வாய்ப்புக் கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். தாய் வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். கடுமையான காலம். சிரமங்கள் அதிகரிக்கும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். விரக்திகள் மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். வழக்குகள் வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 3,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,S




**ரிஷபம்:** திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும் வாரம். விரக்திகள் மறையும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தேக ஆரோக்கியம் கூடும். நிதி நிலைமை சீராகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். அந்தஸ்து உயரும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக் கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். காரியத்தடை ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. துணிவோடு செயல்படுவீர்கள். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். உள்ளம் மகிழும். வறுமைகள் ஒழியும். தனலாபம் கூடும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். நண்பர்களால் உதவி உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளி துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**மிதுனம்:** தொட்டது துலங்கும் வாரம். ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். வெளியூர் பயணம் உண்டு. புதிய தொழில் அமையும். தொழில் வளம் கூடும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் உற்சாகம் கூடும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். வியாபாரம் லாபம் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. புதிய நட்பு உருவாகும். வாகனச் செலவு ஏற்படும். அனுகூலமான காலம். நன்மைகள் நாடி வரும். வராதக் கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் லாபம் தரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீனிவாசப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,4,9,7
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,T




**கடகம்:** தடங்கல் இல்லாத தன வரவு வரும் வாரம். யோகமான காலம். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும் கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. கமிஷன் தொழில் லாபம் உண்டு. ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். திட்டம் வெற்றி பெறும். பட்டம் பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத காலம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளால் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய தகுதிகள் மேம்படும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பொருளாதாரம் உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஆடை, அணிகலன்கள் சேரும். புது முயற்சிகள் பலன் தரும். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,J


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான காலம். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத் துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய் வழி உறவால் கவனம் தேவை. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உடல் பொலிவு கூடும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். விறுவிறுப்பான காலம். பிரியமானவ்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். புதிய கடன் உருவாகும். தொழில் போட்டிகள் அதிகமாகும். மருத்துவச் செலவு குறையும். பயணம் அனுகூலம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Y




**கன்னி:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். மன உறுதி அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை அகலும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். விரக்திகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கலனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். குடும்பத்தில் மேன்மை உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். சாதனைகள் ஏற்படும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பணியில் பாராட்டு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். விரும்பியது நிறைவேறும். திருப்பங்கள் நிறைந்த காலம். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புக்கள் அகலும். வேற்றுமைகள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,5,3,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V




**துலாம்:** வில்லங்கம் விலகும் வாரம். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பழையக் கடன் தீரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். அற்புதங்கள் நிகழும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். பயணம் பலன் தரும். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். மனைவியின் கோபம் கூடும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். மனம் மகிழும். சீரான வாழ்வமையும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். மன சந்தோஷம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தி தாய், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**விருச்சிகம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. திடீர் செலவு ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். கடன் சுமை குறையும். உடல்வலி தோன்றி மறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. உண்மைகள் வெளிப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தனவரவு உண்டு. குதூகல எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றமதி தொழில் லாபம் தரும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)

# மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் மக்களின் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பு முயற்சி — பாராளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



(மன்னார் நிருபர், 19-06-2025)
மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் கடற்கரையோடு காணப்படும் மக்களின் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பு செய்யவுள்ளமை குறித்தும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் 19ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் (19) விசேட உரை நிகழ்த்தியுள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்...

வன்னி மாவட்டத்தில் உள்ள 3 மாவட்டங்களில் ஒன்றான மன்னார் மாவட்டத்தின் கீழ் பள்ளிமுனை என்னும் கிராமம் உள்ளது.

இங்கு வாழ்கின்ற மக்கள் கடல் தொழிலையே தமது வாழ்வாதாரமாக கொண்டு கடலினை அண்டி வாழ்ந்து வருபவர்கள்.

இது கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற கிராமம். இந்த கடலினை அண்டியதாக 24 குடும்பங்கள் 10 பேர்ச் காணி தூ ண்டில் அரசாங்கத்தினால் வீடு கட்டி கொடுக்கப்பட்ட வீடுகளில் 1984ம் ஆண்டு தொடக்கம் 1990ம் வரை வாழ்ந்து வருகிறார்கள்.

இது தனி நபருக்கு சொந்தமான காணி .ஆனால் 1984 ம் ஆண்டு இக்காணி துண்டுகளை வீடமைப்பு திணைக்களம் வேண்டி வீடுகளை அமைத்து குடியேற்ற திட்டம் ஒன்றை நிறுவி மீளவும் அங்கு குடியேறியவர்களுக்கு விற்று அதற்குரிய பணத்தையும் பெற்றுக் கொண்டது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

இது தனி நபருக்கு சொந்தமான காணிகள் மொத்தம் (2 யஉநசள யனெ 02 ிநசஉா ) இதற்குரிய உறுதிப்பத் உறுதிப் பத்திரங்களும் இவர்களுடைய கைகளில் இருக்கின்றன.

அண்மைக்கால யுத்தம் காரணமாக இந்த மக்கள் தாங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வந்த பூர்வீக காணிகளையும், வீடுகளையும் கைவிட்டு இடப்பெயர்வை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது தவிர்க்க முடியாத தோன்றாகி விட்டது.

மக்கள் 1990ல் இடம்பெயர்ந்த பின்பு இது இராணுவம்,பொலிஸ், தற்பொழுது கடற்படையினரின் முகாமாக இருப்பிடமாக மாறியிருக்கிறது.

அவர்கள் இந்த பொதுமக்களுக்கு சொந்தமான குடியிருப்புக்களை ஆக்கிரமித்து தொடர்ந்து அரசாங்கத்துடன் இணைந்து தங்களது சொத்தாக மாற்றிக்கொள்ள முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் காணியுடைய உரிமையாளர்கள் இவற்றை மீட்டெடுப்பதற்காக நீதிமன்றில் வழக்கு கொடுத்திருந்தார்கள். ஆனால் அரசாங்கம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இந்த காணிகளை அரச சொத்தாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றது. என மேலும் தெரிவித்தார்.

# ரொறன்ரோ நகரின் கிழக்குத் துறைமுக போக்குவரத்து இணைப்பு மையத்துடனான போக்குவரத்து விரிவாக்கத்தை ஒன்ராறியோ அரசு ஆரம்பித்துள்ளது

ரொறன்ரோ நகரின் கிழக்குத் துறைமுக போக்குவரத்து இணைப்பு மையத்துடனான இணைப்பினை ஒன்ராறியோ அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அமைக்கத் தொடங்கியுள்ளமை, ஸ்கார்பரோ உட்பட்ட ரொறன்ரோ பெரும்பாகப் பகுதிகளுக்கான போக்குவரத்து இணைப்பில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கொள்ளப்படுகிறது. இவ்விணைப்பு மையத்தின் கட்டுமானப் பணிகள் முழுமையடைந்ததும், இது "ஒன்ராறியோ லைன்" சேவையை "லேக்ஷோர்" கிழக்கு மற்றும் "ஸ்ரோவில்" வழித்தடங்களை "கோ ட்ரான்சிட்" பாதைகளுடன் இணைத்து ஏறத்தாழ நாளொன்றுக்கு 100,000 பயணிகளுக்கான சேவையினை வழங்குவதன் மூலம் யூனியன் நிலையத்தில் ஏற்படும் நெரிசலைக் குறைக்கும்.

"இத்திட்டமானது ஒன்ராறியோ மாநிலத்துக்கான வலுவான, அதன் பகுதிகளை இணைத்த எதிர்காலத்தை உருவாக்குவது பற்றியதும் பயணங்களை விரைவாக்கவும், அதிக வேலைவாய்ப்புகள் மற்றும் வீட்டுவசதிகளை வழங்கக்கூடிய ஒன்றாகும்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். ஸ்கார்பரோ குடியிருப்பாளர்களைப் பொறுத்தவரை, அவர்களின் ரொறன்ரோ நகருக்கான போக்குவரத்தை இலகுவாக்கி,



நேரத்தைக் குறைத்து, வசிப்பிடத்தின் அருகிலேயே அதிக வாய்ப்புகளை உருவாக்கும். இத்திட்டம் ஒன்ராறியோவின் 70 மில்லியன் டொலர்கள் செலவிலான, வட அமெரிக்காவிலேயே மிகப்பெரிய போக்குவரத்து விரிவாக்கத் திட்டமாகும்.



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** கல்வியில் கவனம் தேவை. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். கடன் அதிகமாகும். பேச்சில் பணிவு தேவை. பெற்றோர் ஆலோசனை பலன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவுகள் தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். உறவினர் வருகை உண்டு. நட்பால் பிரிவு ஏற்படும். பால் தானம் செய்வதால் பாவங்கள் விலகும். வரவுகள் அதிகரிக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். வஸ்திர தானம் வளம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**தனுசு:** சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும் வாரம். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பெருமைகள் கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். மனஅமைதி சீர்குலையும். வாகன மாற்றம் உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்ட காலங்கள் மறையும். பணிவும், துணிவும் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். உற்சாகம் களை கட்டும். பொதுவாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிக்கொள்ளும். ஆடை, அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். வங்கி சேமிப்பு உயரும். முற்போக்குச் சிந்தனைகள் உருவாகும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். மங்கல செய்தியால் மனம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டு. பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,G




**மகரம்:** தேக ஆரோக்கியம் மிளிரும் வாரம். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். படிப்பில் கவனம் வேண்டும். திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து நீங்கும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புகள் கூடும். வியாபாரம் செழிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் குறையும். விவாக முயற்சி வெற்றி தரும். முத்தான வாய்ப்புகள் பெருகும். ஸ்திர சொத்து சேரும். கனவுகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கல்வி ஈடுபாடு கூடும். கணவனின் அன்பு அதிகரிக்கும். வேண்டாத நபர் விலகுவர். வேலை வாய்ப்பு கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். இஷ்ட தெய்வத்தால் கஷ்டங்கள் விலகும். வருமானம் வரும். பூமியால் லாபம் உண்டு. பாதகம் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




**கும்பம்:** வாயில் தேடி வரன் வரும் வாரம். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய் வழி உறவால் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். சாதுர்யமான காலம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். பொருளாதார வளம் மேம்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகனச் செலவுகள் ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து சீராகும். பங்குச்சந்தையில் இலாபம் பெருகும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தடைகள் விலகும். வீண் செலவுகள் அதிகரிக்கும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் தரும். பெற்றோர் நலம் கவனம் தேவை. புதிய பொறுப்பு வரும். செலவு அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,6,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**மீனம்:** வெளியூர் பயணம் வெற்றி தரும் வாரம். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேர்க்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கலை ஆர்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். சிறப்புக்கள் சேரும். போட்டி, பொறாமைகள் விலகும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. தொல்லைகள் அகலும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். ஆடம்பர அகங்கள் கூடும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். போதிய வரவு தரும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. தொட்டது துலங்கும். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். இனிப்பானச் செய்தியால் மனம் மகிழும். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் நீங்கும். எண்ணங்கள் மாற்றம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். மருத்துவச் செலவு கூடும். காரிய அனுகூலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,K

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கில் 304 சிறுமிகள் பாலியல் துஸ்பிரயோம் — தடுக்க "சரோஜா" திட்டம்

## கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 93 சிறுமிகள் உட்பட கிழக்கு மாகாணத்தில் 16 வயதுக்கு உட்பட்ட 304 சிறுமிகள் 2024ம் ஆண்டு பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை மிகவும் கவலைக்குரியது. எனவே பாதுகாப்பற்ற சிறுமிகள் எத்தனைபேர் உள்ளனர் எனவே இவர்களை பாதுகாப்பதுடன் தடுக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பாதுகாப்பு எனும் கருத்திட்டத்தின் அடிப்படையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதாக துஸ்பிரயோகத்தை தடுக்கும் “சறோஜா” திட்டம் ஆரம்பித்து வைக்கு நிகழ்வு மட்டக்களப்பு சிரேஸ் பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலாரத்தினவின் தலைமையில் காரியாலய மண்படபத்தில் 12ம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற போது இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த குழந்தைகள் பெண்கள் மீது பாலியல் துஸ்பிரயோகத்திற்கு முதல் காரணம் அவர்களுக்கு அருகிலுள்ள உறவினர்கள் அதனால் இவ்வாறான குற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தாய் தந்தை பொலிஸ் நிலையத்துக்கு செல்வதில் வெட்கம் மற்றும் கௌரவம் காரணத்தால் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு கிடைப்பதில்லை.

ஒரு பெண் குழந்தைக்கு பாலியஸ் துஸ்பிரயோகம் நடந்த பின்னர் அதனை முறைபாடு செய்வதால் பிரயோசனமில்லை எனவே துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக முதல் பாதுகாப்பது தான் சிறந்தது அதற்கு முதலில் கிராமம் பிரதேசங்களில் எத்தனை பெண் குழந்தைகள் பாதுகாப்பு இல்லமல் இருக்கின்றார்கள் என கண்டறிய வேண்டும்.

சில பிள்ளைகளின் தாயார் வெளிநாடு சென்றிருப்பர் அல்லது அந்தையர் வெளிநாடு சென்றிருப்பார் அல்லது தாய் தந்தையினர் மதுபோதைக்கு அடிமையாகி இருப்பர்கள் இவ்வாறு ஏற்படும் குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகளுக்கு பாது காப்பு இல்லாததால் அவர்கள் இந்த பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்க ப்படுகின்றனர்.

எனவே “சரோஜா” திட்டமானது பெண் குழந்தைகள் பாதிக்கபடுவதற்கு முன்னர் பாதுகாப்பதே இந்த திட்டம் எனவே மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலையங்களின் கீழ் உள்ள கிராம சேவர் பிரிவுகளில் இவ்வாறு பாதுகாப்பற்ற குிந்தைகள் எத்தனை பேர் உள்ளனர் என கணக்கு எடுக்கப்பட்டு அவர்களை தொடர்ந்து பாதுகாப்பது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டு இந்த பாலியல் துஸ்பிரயோகம் இல்லாமல் செய்யப்படவேண்டும் ஏன் என்றால் பெண் குழந்தைகளின் எதிர்காலம் இதற்கு சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள். வனிதா சேவா, சிறுவர் உரிமைகள் அமைப்புக்கள் பொதுமக்கள் பொலிசாருக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.





கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தரவின் தயாரிக்கப்பட்ட இந்த திட்ட நிகழ்வில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் மென்டிஸ். உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலஜஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பெண்கள் சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள். வனிதா சேவா, சிறுவர் உரிமைகள் அமைப்புக்கள், பிரதேச செயலக சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டதுடன்.

இதேவேளை பொலிஸ் மா அதிபர் வீடியோ மூலமாக இந்த சரோஜா திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றியமை குறிப்பிடதக்கது.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN

# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank
First National Financial LP
TD Canada Trust
Manulife
National Bank
Desjardins
RFA
MCAP
Home Trust
Equitable Bank
radius financial
RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

RIDE-U
தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1524 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 20, 2025

# வெகு விமரிசையாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழா 2025






கனடா உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பெற்று 10வது வெற்றிகரமான ஆண்டில் (1996) ஆரம்பிக்கப்பெற்ற நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவின் 19வது ஆண்டாக இவ்வாண்டின் விழா கடந்த 14ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் சிறப்பாக நடைபெற்றது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)



# "சைக்கிள்" தமிழ்த் தேசியத்தோடு ... "வீடு" எதிரிகள் மற்றும் துரோகிகளோடு"

"இலங்கையின் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல கம்யூனிசத்தை எதிர்க்க எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என அறிவித்தார். அதேபோன்று தமிழ் மக்களுக்கு எதிரான போரில் வெற்றிபெற எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர தயார் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே .ஆர். ஜெயவர்த்தன அறிவித்தார். அதே வழியில்தான் தமிழ் தேசியத்தை அழிக்க எந்தப் பேயுடனும் எதிரிகள், துரோகிகளோடும் கூட்டுச்சேரத் தயார் என்கின்றனர் தமிழரசின் அரசியல் சூதாடிகள்"" - கே.பாலா (தொடர்ச்சி 21ம் பக்கம்)

# முன்னாள் "இலங்கை போக்குவரத்துச் சபை" ஊழியர்கள் சங்கம் – கனடா நடத்திய வருடாந்த ஒன்றுகூடல்




கனடாவில் கடந்த 20 வருடங்களாக இயங்கிவரும் முன்னாள் "இலங்கை போக்குவரத்துச் சபை" ஊழியர்கள் சங்கம் நடத்திய 2025 ஆண்டிற்குரிய வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 15-06-2025 ஞாயிற்றுக்கிழமையன்று மதியம் தொடக்கம் மாலை வரை ஸ்காபுறோ நீல்சன் பூங்கா வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி வருடாந்த ஒன்றுகூடலை சிறப்பாக நடத்துவதற்கு சங்கத்தின் தலைவர் திரு. கௌரிநாதன், செயலா-ளர், எஸ். தவகுலதாசலிங்கம். உபு செயலாளர் வ.சுகுமார் உட்பட அனைத்து உறுப்பினர்களும் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.
(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# இலங்கை வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனை கனடிய பாராளுமன்றத்திற்கு அழைத்துச் சென்ற கனடா உதயன் குழுவினர்



"உதயன்" சர்வதேச விருது விழாவில் "வாழ்நாள் சாதனையாளர் விருது-இலங்கை " என்னும் உயர் கௌரவத்தைப் பெறுவதற்காக கனடா வந்திருந்த இலங்கை வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களை கனடிய பாராளுமன்றத்திற்கு அழைத்து வரும் வண்ணம் விடுக்கப்பெற்ற அழைப்பின் பேரில் உதயன் பிரதம ஆசிரியர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (தொடர்ச்சி 13ம் பக்கம்)



# வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனை தனது சரவணபவன் சைவ உணவக மிசிசாகா கிளைக்கு அழைத்து மதிய விருந்தளித்து கௌரவித்த கணேசன் சுகுமார்

"உதயன்" சர்வதேச விருது விழாவில் "வாழ்நாள் சாதனையாளர் விருது-இலங்கை " என்னும் விருது பெறுவதற்காக கனடா வந்திருந்த இலங்கை வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனை கௌரவிக்கும் முகமாக கனடாவில் நான்கு கிளைகளைக் கொண்டியங்கும் " சரவணபவன் சைவ உணவகங்களின் உரிமையாளர் கணேசன் சுகுமார் அவர்கள் கஜனையும் அவரது நண்பர்களையும் தனது மிசிசாகா உணவகத்திற்கு அழைத்து மதிய விருந்தளித்து கௌரவித்தார்.

16ம் திகதி திங்கட்கிழமை அங்கு சந்தித்து விருந்துண்டு மகிழ்ந்த நண்பர்கள் அனைவரும் பலவேறு விடயங்கள் பற்றி உரையாடி விருந்துண்டு விடைபெற்றனர்.